بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பத்திராதிபர் :—கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம். 3	1926ஹு ஆகஸ்டுமீ	பகுதி. 8

ஔரங்கஸீபும் ஹிந்து தேவாலயங்களும்.

('பாராபங்கீ' ஜில்லாவைச் சார்ந்த 'ராம்நகர்' என்னும் சமஸ்தான மானேஜராகிய "மாயூராம்னராயின்" எழுதியது)

'ஆலம்கீர்' என்னும் ஔரங்கஸீபை மதவெறி பிடித்தவரென்று பலர் கூறுகின்றனர். ஔரங்கஸீப் ஹிந்துமத தேவாலயங்களை யிடித்து நாசமாக்கினதாயும், ஹிந்துக்களுக்கு சொல்லொணுக் கஷ்ட நிஷ்டூரங்களைப் புரிந்து கொண்டிருந்ததாயும் பறைசாற்றுவோர்க்குப் பஞ்சமில்லை. ஆதலின் இத்தகையோர் கூறுவதுள் ஏதேனும் உண்மையிருக்கிறதா, என்று ஆராயவேண்டியது நம்கடமையல்லவா?

மதவைராக்கியம் காரணமாய் தேவால்யங்கள் இடிக்கப்பட்டன வென்று எவர் கூறினும் அக்கூற்றை யான் அங்கீகரிக்கக் கூடவில்லை. ஏதேனும் இடிக்கப்பட்டிருப்பின் அது ராஜீயலக்ஷியத்தை அடிப்படையாய்க் கொண்டிருக்குமென்று நான் நிச்சயமாய்க் கூறுகிறேன். மேலும் ஔரங்கஸீப் மதவெறி பிடித்தவரென்றும் சதா விக்கிரகங்களை நாசமாக்குவதைத் தொழிலாய்க் கொண்டிருந்தவரென்றும் கூற நியாயமில்லை யென்பதற்குரிய சாக்ஷியங்களுள் சிலவற்றை இதனடியில் எடுத்துக்காட்டுகிறேன்.:—

(1) சீத்தாப்பூரில் பிரசித்திப்பெற்ற ஹிந்து தேவாலயமொன்றுண்டு. இத்தேவாலயத்தின் மஹந்து விடத்தில் ஔரங்கஸீப் அவர்களால் அளிக்கப்பட்ட ஓர் இனும் சாசனமிருக்கின்றது. இச்சாசனத்தின் மூலமாய் மதக்கிரியையின் செலவுக்காக மஹந்துவுக்கு ஏரான

மான பூமிகள் கிடைத்திருந்தன. அப்பூமிகளுள் சில இத்தேவாலயத்தின் இன்றைய மஹந்துவின் ஸ்வாதீனத்திலிருப்பதைப் பார்க்கலாம்.

(2) மாத்துராவுக்குச் சமீபத்தில் "பல்தேவ்தாவர்" என்றோர் ஸ்தலமிருக்கின்றது. அங்குள்ள "பல்தேவ்ஜி" என்னும் கோயிலின் செலவுக்காக ஔரங்கஸீப் பலபூமிகளை யளித்திருக்கின்றார். அப்பூமிகள் இன்றைக்கும் "பல்தேவ்ஜீ" கோயிலுக்குச் சொந்தமாகவிருக்கின்றன: மேலும் இவ்வாறே ஔரங்கஸீப் பல ஹிந்து கோயில்களுக்கு பூமிகளை இனுமளித்திருக்கக் கூடுமென்று கருதவேண்டியிருக்கின்றது.

(3) அலஹாபாத்தில் ஜம்னு நதிக் கரையிலிருக்கின்ற கோட்டை அக்பர் சக்கரவர்த்தியின் காலத்தில் கட்டப்பட்டதே. ஆனால் இக்கோட்டை ஔரங்கஸீபின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது, என்னும் உண்மையை எவரேனும் மறுக்க வியலுமா? இக்கோட்டைக்குள் ஹிந்துக்களின் கோயிலொன்றிருக்கின்றது. இக்கோயிலிலும் கோயிலைச்சுற்றிலும் ஆயிரக்கணக்கான விக்கிரகங்கள் இருக்கின்றன. மேலும் இக்கோயிலுக்குச் சமீபத்தில் ஒரு பெரிய விருக்ஷமுமுண்டு. இன்றைக்கும் பல்லாயிரக்கணக்கான ஹிந்துக்கள் இத்தேவாலயத்தைத் தரிசித்து வருகின்றனர். மேலும் இக்கோயிலின் பூசாரீ, பண்டா முதலியோர் இன்றுவரை தங்கள் கொள்கைப்படி பூசையை நடத்தி வருகின்றனர், இத்தேவாலயத்திலிருக்கும் மூர்த்திகளையுற்று நோக்குவோமாயின் இவைகள் ஆயிரக்கணக்கான வருடங்களுக்குமுன் செய்யப்பட்டவைக ளென்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம். மேலும் இத்தேவாலயத்திலுள்ள மூர்த்திகளில் ஒன்றேனும் பின்னப்படுத்தப்பட்டதாகக் காணக்கூடவில்லை. ஔரங்கஸீப் மதவெறி பிடித்தவராயும் விக்கிரகங்களை உடைத்து நாசஞ்செய்தவராயுமிருந்தா ரென்பது உண்மையாயின் முதலாவதாகத் தங்கள் கோட்டைகுள்ளிருக்கும் தேவாலயத்தையும், விக்கிரகங்களையும் நாசஞ்செய்திருக்க வேண்டுமல்லவா?

(4) பின்னப்படுத்தப்பட்ட விக்கிரகமேதேனும் இன்றுகிட்டிவிடுமாயின் அது ஔரங்கஸீபால் பின்னப்படுத்தப்பட்ட தென்று கூற எவரும் முற்படுவதைப்பார்க்கலாம். ஆனால் உண்மை வேறு. சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் காலத்தில் ஜைனமதம், புத்தமதம் ஆகிய இருமதத்திற்கும் விரோதமாய் பெரிய யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதுபோழ்து பின்னமாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான விக்கிரகங்கள் அறியாமை காரணமாய் ஹிந்து தேவாலயங்களில் ஸ்தானம்பெற்றிருக்கின்றன. இத்தகைய விக்கிரகங்களை நான் என்

கண்களால் பார்த்திருக்கின்றேன். ஆனால் இவைகள் ஔரங்கஸீபால் உடைக்கப்பட்டன வென்று கூறுவது நியாயமா?

(தொடரும்)

உஹூமுத்தீனும், முஸ்லிம் அத்வைத மூலமொழியும் மறுக்கப்படுகின்றன.

வேலூர் உலமாக்களால் தமிழில் கோடீக்கப்பட்ட பத்வா.

(263-ம் பக்கத் தொடர்ச்சி.)

இஸ்லாம் மத பாதுகாவலர்களாகிய முதகல்லிமுகள் இக்குபிர் வாக்கியங்களை அழுத்தமாகக் கண்டித்திருக்கிறார்கள். உலகப்பற்றை நீத்து மறு உலக வாழ்க்கையையே சதா சிந்தித்துக்கொண்டிருந்த சூபியாக்கள் என்னும் துறவிகளும் இப்பொய்க்கூற்றுகளைக் கண்டித்திருக்கிறார்கள். ஹிந்துமத ஞானிகளின் கொள்கைகளை, தான் வெகு பலமாக பிடித்துக்கொண்டு அவற்றிற்கு அத்தாக்ஷி குர்ஆன், ஹதீது களில் தேடிப்பார்த்து இவர்கள் கொள்கைக்கு ஒத்தபடி தஃவீல் (வலிந்துரை) கொடுத்து தங்கள் கொள்கையுடன் ஒட்டவைக்கிறார்கள். இவர்கள் கூறும் கூற்றிற்கு நேர்மாற்றமாக நமது திருக்குர் ஆனிலும் ஹதீதுகளிலும் நூற்றுக்கணக்கான அத்தாக்ஷிகள் மலிந்து கிடக்கின்றன. சிலவற்றை மட்டும்ஈண்டு வரைகின்றோம்.

நிச்சயமாக நீங்களும் நீங்கள் வணங்கும் அல்லாஹ் அல்லாதவைகளும் நரகத்தின் விறகுகளாக இருக்கும். நீங்கள் (உங்களால் வணங்கப்படும் விக்கிரகங்களுடன்) அந்நரகை அடைபவர்களே. (அவ் விக்ரகங்களைப் போன்ற) வைகள் தெய்வங்களாக இருக்கும் பக்ஷத்தில் அந்நரகை அடையமாட்டார்கள். மேலும் (நீங்களும் அத்தெய்வங்களும்) எல்லோரும் அந்நரகத்தில் சாசுவதாக இருப்பவர்கள் தான். (சூறா 21-ஆயத்து 98, 99)

சீ! நீங்களும் நீங்கள் வணங்கும் அல்லாஹ் அல்லாத (விக்கிரகம் போன்ற வைகளும் (பழிக்கப்பட்டவர்களே) உங்களுக்குப் புத்தியில்லையா? (21-67)

(அல்லாஹ்வின் றசூலே!) சொல்லுங்கள் ஏ! அறிவிலிகளே! அல்லாஹ் அல்லாத (விக்கிரஹம்போன்ற) வைகளை நான் வணங்கவேண்டுமென எனக்குக் கட்டளையிடுகிறீர்களா? (சூறா. 39. ருக். 16)

மூஸா அலைஹிஸ்ஸலாம் தங்கள் கூட்டத்தார்களுக்குச் சொன்னார்கள். அல்லாஹ் அல்லாததை உங்களுக்கு நாயகனாக நான் தேட வேண்டுமா? (அத். 7. ருக். 16)

தன் தந்தையிடத்திலும் தன் கூட்டத்தாரிடத்திலும் (இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் கடிந்து) கூறினார்கள், என்னே! நீங்கள் வணங்குபவை இறைவனல்லாத பொய்யான தெய்வத்தையா நாடுகிறீர்கள்?

உண்மையாக அல்லாஹுதஆலாவே ஹக்கா (மெய்யா) னவனாகவும் அவர்கள் வணங்கும் அவனல்லாதவைகள் பாதிலா (பொய்யா) னவைகளாவும் இருப்பதினாலே தான் அவ்வெற்றி உண்டாயிற்று அத். 2. ருக்உ. 8.

மெய்யாகவே நீங்கள் வணங்குவதெல்லாம் அல்லாஹ் அல்லாத விக்கிரகங்களையே. மேலும் (அது விஷயத்தில்) நீங்கள் பொய்யுரைகளையே கட்டுகிறீர்கள். (29-2)

அல்லாஹுதஆலா ஹக்கா (சரியா)ன தீர்ப்பு அளிப்பான்; மேலும் அவர் (காபிர்)கள் வணங்கும் அல்லாஹ் அல்லாத (விக்கிரகம் போன்ற) வைகள் யாதொரு விதமான தீர்ப்பும் செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள் (அத். 40. ருக்உ. 2)

(தானாகவே பிறந்துபோன) பிணத்தையும், (வழிந்தோடும்) இரத்தத்தையும், பன்றிமாமிசத்தையும் அல்லாஹ் அல்லாத (விக்ரகம் போன்ற) வைக்காக அறுக்கப்பட்டவைகளையும் தான் (அல்லாஹுதஆலா உங்கள் பேரில் விலக்கியிருக்கிறான். [அத். 2. ருக்உ. 21]

ஹதீது

அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) ரிவாயத்து செய்வதாவது:— நியாயத் தீர்ப்பு நாளன்று ஒவ்வொரு கூட்டத்தினர்களையும் தாங்கள் பூஜித்துக்கொண்டிருந்தவைகளைப் பின்பற்றிக்கொள்ளுங்கள், என்று ஒரு கூப்பிடுபவர் விளித்துச் சொல்லுவார். அப்போது அல்லாஹ் அல்லாத் நாட்டிவைத்த கற்களையும், விக்கிரகங்களையும் ஆராதித்துக் கொண்டிருந்தவர் [காபிர்] களில் ஒருவரேனும் மீதி இல்லாமல் எல்லோரும் நரகில் விழுந்துவிடுவார்கள். ஆனால் அல்லாஹுதஆலாவை வணங்கியவர்கள் தான் எஞ்சி நிற்பார்கள். அவர்கள் பக்தராயினும் சரி பாவிகளாயினும் சரி [புகாரி முஸ்லிம்]

எவனொருவனில் மூன்று வஸ்துக்கள் இருக்கின்றனவோ அவன் இன்பத்தை பெற்றுக்கொள்வான். அல்லாஹுதஆலாவையும். அவனின் ரசூலையும் அவர்கள் இருவருமல்லாததனைக் காண அதிக நட்புவைத்தல் [ஒன்று] [மிஷ்காத்து]

மேலே குறிப்பிட்டுள்ள ஆயத்து ஹதீதுகளினால் சிருஷ்டி பொருள்களெல்லாம் ஆண்டவனுக்கு வேறானவை என்பதற்குத் தக்க ஆதாரங்களாகும். அவைகளொவ்வொன்றையும் விரிக்கின் வெகு

தூரம் பெருகிவிடும். விரிவஞ்சி விட்டு விட்டோம். அரபி பாஷை யறிந்தவர்களிடம் அப்பாஷையை உணரமுடியாதார் வினவின் ஒவ்வொரு ஆயத்தும் தெளிவாய் சிருஷ்டிப்பொருள்கள் அல்லாஹுத ஆலாவுக்கு மாறான [வேறு பொருள்களாவன]வை என்று விளங்குகிறதென, சிற்றறிவாளனும் உணர்ந்துகொள்ளக்கூடும். அல்லாஹுதஆலா வேறு; விக்கிரகம் போன்ற வஸ்துக்கள் வேறு என்று குர் ஆனும், ஹதீதும் அறிவிக்காது என வாதிப்பது வீண்வாதமேயாகும். மேற்குறிக்கப்பட்ட ஆயத்து ஹதீதுகளில் தெளிவாக கூறப்பட்டிருப்பதை தஃவீல் [வலிந்துரை] செய்து எல்லாம் ஒன்றுதான் எனக்கூறுவது முட்டாள்தனமான செயலாகவும் மார்க்கத்தை அலக்ஷியம் செய்வதாகவும் ஆகும். பாங்கு துஆவில் குறிக்கப்பட்டிருக்கும் மகாமே மஹ்மூதா என்னும் ஸ்தலம் நபி [சல்] அவர்களுக்காக கியாமத் நியாயத் தீர்ப்பு நாளில் ஷபாஅத்துச் செய்யும்படி ஏற்படுத்தப்பட்ட ஓர் இடமாக இருக்குமென்று நபி [சல்] அவர்களே வியாக்கியானம்செய்திருக்கிறார்கள். அப்படியிருக்க அதை விட்டுவிட்டு அல்லாஹுத ஆலா தன் முஹம்மது [சல்] அவர்களாக வெளியாவான், என்று கூறுவது பெரும் பேதமையாய் இருக்கின்றது. சலபுகள் முதல் மற்றெல்லா மகான்களும் கலிமாவின் அர்த்தத்தை புரட்டிக் கெடுத்துப்போட்டார்கள், என்று கொஞ்சமும் அஞ்சாது அத்வைத சித்தாந்தி கூறுகிறார். ஆனால் அவர் யாரிடமிருந்து கலிமாவின் பொருளை தெரிந்துகொண்டாரெனத் தெரியவில்லை சஹாபாக்களின் மாறலாகத்தான் நமது இஸ்லாம் மதக்கொள்கைகளை மற்றெல்லா முஸ்லிம்களும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க இவர் சொல்லும் பொருள் எந்த சஹாபியின் மாறலாகக்கிடைத்ததெனக்கூற முன்வருவார்? அல்லது சஹாபாக்களும் அதன் பொருளைப் புறட்டிப்போட்டார்கள், என வாதிப்பாரா? சஹாபாக்கள் முதல் நாளது வரையிலுமுள்ள முஸ்லிம்களும் முஸ்லிம் நிபுணர்களும் கொண்டுள்ளகொள்கை தப்பானதெனக் கண்டிக்க இவருக்கு என்ன பாத்தியமிருக்கிறது.

நபி [சல்] அவர்கள் தங்கள் கூட்டத்தினர் விஷயத்தில் கூறியிருக்கும் திருவசனங்களிற் சிலவற்றை மட்டும் இங்கு காண்பிக்கிறோம்.

என் உம்மத் [கூட்டத்]தார்கள் [ஒருக்காலும்] வழிகேட்டின் பேரில் ஒற்றுமையாகமாட்டார்கள். அல்லாஹுத ஆலாவின் அனுக்கிரகம் பெரும்பான்மையோர் மேல் இருக்கிறது. எவன் [பெரும்பான்மையோரை விட்டும்] தனித்திடுவானோ அவனை நரகத்திலும் தனிமையாக்கப்படும்,

பெருந்திரளான கூட்டத்தை துயர்ந்து கொள்ளுங்கள்.

என் சஹாபா [சஹா]க்களை கண்ணியப்படுத்துங்கள். ஏனெனில் அவர்கள் உங்களில் உத்தமமானவர்களாக இருக்கும். பின்பு அவர்களை அடுத்தவர் [தாபிஈன்]கள், பின்பு அவர்களை அடுத்தவர் [தபஅத்தாபிஈன்]கள் [மிஷ்காத்]

என் தோழர்கள் நக்ஷத்திரம் போன்றவர்கள். அவர்களில் எவரை நீங்கள் பின்பற்றினாலும் நேர்வழியை அடைந்துவிடுவீர்கள். [மிஷ்காத்]

(ஆகவே) இப்படிப்பட்ட அநந்தம் ஹதீதுகள் மலிந்து கிடப்பதை மதக்கல்வியின் நறுமணத்தை கொஞ்சமாவது நுகர்ந்து எவரும் அறிந்திருப்பர். மேற்குறிக்கப்பட்ட ஹதீதுகளினால் ஸஹாபாக்கள், இமாம்கள், முஜ்தஹிதுகள் கண்ணியம் வாய்ந்த நுண்ணறிவாளர்களெனத் தெளிந்துபோகவில்லையா? மேலும் அன்றுமுதல் இன்றுவரை, கற்றோர் முதல் மற்றோரும் வேதபாடையார்கள் முதல் துறவிகள் வரை எல்லோரானும் ஏகோபித்து அனுஷ்டித்துவந்த கலிமாவின் பொருளை எவரோ ஒருவர் இஸ்லாம் மத விரோதிகளின் தூண்டுதலால் பேதகப்படுத்தி, குர்ஆன் ஹதீஸுகளில் உள்ள தெளிவான வாக்கியங்களை புறட்டி, பொதுமக்களை வஞ்சித்து வருபவர்களின் வார்த்தைகளை இஸ்லாமும், முஸ்லிம்களும் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆகையால் குர்ஆனும், ஹதீதும், அல்லாஹுத்த ஆலா வேறு, அவனால் படைக்கப்பட்ட சிருஷ்டிகள் வேறு என்பதை எவ்வளவு துலக்கமாக விளக்கியிருக்கின்றதென்பதை நாம் நிரூபித்துக் காண்பித்துவிட்டோம்.

ஆனால் சூபிய்யாக்களில் தலைவராகிய முஹிய்யத்தீனிப்னு அரபி (ரலி) அவர்களும் அவர்களைப் பின்பற்றிய மற்ற சூபிய்யாக்களும் ஹக்கு வேறுதான், கல்கு வேறுதான், என்றும் ஹக்கும் கல்கும் எவ்விதத்திலும் ஒன்றாகமாட்டாதென்றும் கூறியிருக்கிறார்களேயல்லாமல் இவர்கள் கூறுவதுபோல் ஹக்கும் கல்கும், ஒன்றுதானென சொல்லவே கிடையாது. அவர்கள் கூறும் வார்த்தைகளைக் கொஞ்சமாவது விளங்காமல் குருடர்கள் யானை பார்த்த கதைபோல் குருட்டுத்தனமாக விளங்கிவிட்டு என்னென்னமோ தாறுமாறாக இம்மூன்று கிதாபுகளினும் வரைந்திருக்கிறார்கள்.

மேலும் புசூசுல்ஹிகம் போன்ற இப்னு அரபியின் நூல்கள் என கூறப்படும் நூல்களை அவரிடம் கொண்ட பொறாமையால் யஹூதிகள் அவரின் பெயரை வைத்து வரைந்திருக்கிறார்கள் என்றும், முஸ்லிம்கள் அந்நூல்களை அடியோடு நீக்கிவிட வேண்டுமென்றும், இஸ்

லாம் அரசாங்கத்தினரால் அவைகள் பரிமுதற் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் துர்ருல் முக்தாரின் ரித்தத் என்னும் பாடத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதுமட்டுமா அப்துல் வஹ்ஹாப்ஷஃரானி (ரலி) என்பவர்கள் தன் அல்யவாகீது வல்ஜவாஹிர் என்னும் நூலில் எழுதியிருக்கும் சாராம்சமாவது.

ஷெய்கு இப்னு அரபியின் புதூஹாத்து போன்ற கிதாபுகளில் மார்க்க விரோதிகள் அநேக மார்க்கமுரண்பட்ட விஷயங்களை நுழைத்திருக்கிறார்கள். அவைகளில் யாதொன்றும் இப்னு அரபி எழுதிய மூலபிரதியில் கிடையாது. ஆகையால் மார்க்கத்துக்கு விரோதமான கொள்கைகளை ஷெய்கு இப்னு அரபியின் கொள்கை என்றும் எல்லாம் அவர் எழுதியதென்றும் நினைத்துவிடாதீர்கள். அவைகளை ஒதுக்கித் தள்ளி விடுங்கள். இப்னு அரபி தன் கொள்கையைப்பற்றி எழுதும்போது அல்லாஹுதஆலாவுக்கு எந்த வஸ்துவும் சமமாக மாட்டாது. அவன் யாதொரு வஸ்துவுடன் கலக்கவோ, ஒன்று சேரவோ, மற்றெந்த வஸ்துவும் அவனுடன் ஒருமிக்கவோ முடியாதவன். அவன் தனித்தவன் மற்ற வஸ்துக்களெல்லாம் அவனின் சிருஷ்டிகள் அவனுக்கு மாறுபட்டவைகள். அல்லாஹுதஆலா என்றென்றும் நிலைத்திருக்கின்றவன் அழிந்து போகும் வஸ்துக்களும், அழியாத நிலைப் பொருளும் எங்ஙனம் ஒன்றுசேரும். ஆகையால் அவன்வேறு, அவைகள் வேறுதான்.'' என்று விரிவாகவும் தெளிவாகவும் எழுதி யிருக்கின்றார்கள். பொன்னை போல் போற்றப்படும் (அவர்களின்) இவ்வரிய வாக்கியங்களை நீக்கிவிட்டு மார்க்கப் புறம்பான கட்டுக்கதைகளைப் பொருக்கி எடுத்துக்கொண்டு, இது முஸ்லிம்களின் கொள்கை என வாதிக்கின்றார்கள். மேலும் அல்லாஹுத்தஆலாவைக்கொண்டும், அவனின் ரசூலைக்கொண்டும் முஸ்லிம் மக்களாகிய நாம் ஈமான் கொண்டிருக்கிறோமே யன்றி, ஷெய்கு இப்னு அரபீ, அப்துல்கரீம் ஜீலி போன்றவர்களைக்கொண்டு ஈமான் கொள்ளவில்லை. ஆதலால் நாம் அவர்களுடைய மார்க்கத்துக்கு விரோதமில்லாத வார்த்தைகளை மட்டும் ஒப்புகொள்ளவேண்டுமே யன்றி, மார்க்கத்திற்கு விரோதமான பரவச (வஸ்து) நேரத்தில் கூறிய வார்த்தைகளை ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியம் நமக்கென்ன இருக்கிறது?

மேலும், "பின் ஒரு காலத்தில் பொய்யர்களான தஜ்ஜால் (மோசக்காரர்) கள் தோன்றி நீங்களும் உங்கள் பெரியோர்களும் கேட்டிராத நூதன விஷயங்களைக் கொண்டுவருவார்கள்; ஜாக்கிரதை! அப்படிப்பட்ட நயவஞ்சகர்களை நீங்கள் பயந்துகொள்ளுங்கள். அவர்

கள் உங்களை வழிகெடுக்கவும், பித்னவி (குழப்பத்தி) லாக்கவும் விட வேண்டாம்.'' என நபி (சல்) அவர்கள் கூறியதேபோல், இந்நாக ரீகம் மலிந்த காலத்திலும் ரஸாயன சாஸ்திரிகள் நூதன நூதன மான கருவிகளைக் கண்டு பிடிப்பதேபோல் நம் இஸ்லாம் மதத்தி லேயே சில அத்வைத சித்தாந்திகள் தோன்றி நூதன நூதனமான கொள்கைகளைக் கண்டு பிடிக்க முயற்சிக்கின்றார்கள். என்னே! இவர் கள் ஆராய்ச்சியின் வேகம்! இவர்களை இக்காலத்திலுள்ள தஜ்ஜால்கள் என்று கூறுவதில் யாதொரு குற்றமுமில்லை.

இந்தியாவை அரசாக்ஷி செய்துவந்த மொகலாய அக்பர் பாக்ஷா வே அரசு புரிந்ததில் முக்கியமானவர். அவரும் இப்படியே ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை நாடி, இருவகுப்பாருக்கும் பொருத்தமாகக் கூடிய புதிய மதமொன்றை சிருஷ்டித்தார். இவரின் நடத்தையைக் கண்டித்ததற்காகவே ஷெய்கு அஹமது ஸிர்ஹிந்தி முஜத்திது அல்பு தானி (ரஹ்) என்னும் மகான் சிறைவாசம் சென்றார். அவரை (அக் பரை) அல்லாஹுத்த ஆலா அவ்வளவு சீக்கிரம் ஹலாக்காக்காது விட்டிருந்தால் இந்தியாவில் முஸ்லிம்களின் நிலைமையை (அக்பர்) அதிகமாக கெடுத்திருப்பார். அவரின் பேரரான ஷாஹஜஹான் தன் பாட்டனின் கொள்கைகளிற் சிலவற்றை வெளியிட்டதற்காக அவரின் மகனும், மதபக்தியிற் சிறந்தவருமான ஆலங்கீர் (ஔரங்க ஜீப்) தன் தந்தையை (ஷாஹஜஹானை) சிறையிலடைத்து கொலையும் செய்தார். இப்படியே ஒவ்வொரு காலத்திலும் இஸ்லாம் மதத்தைத் தாக்கும்போலிகள் அம்முஸ்லிம் வகுப்புக் குள்ளிருந்தே புறப்படுகி றார்கள்.

ஷெ சுவாலில் கண்ட (3) கிதாபுகளும் கிருஸ்துவ மிஷினரிக ளின் டாலர்களில் மோகங்கொண்டு அவர்களின் தூண்டுதலால்அச் சிட்டு வெளிப்படுத்தியு மிருக்கலாம். ஆகையால் இப்படிபட்ட புஸ் தகம், கிதாபுகளை முஸ்லிம் பொதுமக்கள் வாங்கிப் பார்க்காதிருக்கும் படி கேட்டுக்கொள்கிறோம்.

இதுவே சரியான தீர்ப்பாகும். இறைவன் உண்மையை மிக வறிந்தவன். இப்படிக்கு (மேலூர் மத்ரஸா பாக்கியாத்துஸ் ஸாலி ஹாத்தின் பிரதம போதகர், மௌலானா மௌல்வி) முஹம்மத் அப் துல் ஜப்பார்.......................

(தாஜுல் இஸ்லாம்)

அல்லாஹ், அல்லாதவைகளின் கட்டளையை முஸ்லிம்கள் ஏற்கலாமா?

சுயேச்சையும், சுயமரியாதையுமுள்ள ஒரு தேசத்தார் தங்களிடையுள்ள வழக்கைத்தீர்த்துக்கொள்ளும் பொருட்டு அன்னியரின் கோர்ட்டுகளுக்குப்போக விரும்ப மாட்டார்கள். மேலும் அடிமை வாழ்க்கைக்கு உட்பட்டிருக்கும் இந்தியர், தங்களின் வழக்கைத்தீர்த்துக்கொள்ள, பொறுப்பற்ற இதரர்களின் கோர்ட்டுகளுக்குப்போவது இந்தியாவினுடையவும் இந்தியர்களினுடையவும் மானக்கேட்டிற்குக் காரணமாகவிருக்கிறது, என்னும் முடிவுக்கு வந்திருப்பதை உலகமறியும். இந்நிலையில் முஸ்லிம்கள் இஸ்லாமுக்குக்கட்டுப்படாத இதர ஸ்தாபனங்களையடைந்து தங்கள் வழக்கை தீர்த்துக்கொள்ள இஷ்டப்படுவார்களா? மேலும் இஸ்லாம் மதத்தை யொட்டிய விவாதத்தில் இஸ்லாமுக் கெதிரிடையா யுள்ளவர்கள் பிரவேசித்துத் தீர்த்து வைக்கும்படிச் செய்வது உண்மை முஸ்லிம்களுக்குரிய இலக்ஷணமாகுமா?

முஸ்லிம்கள் தங்களிடையுள்ள விவாதத்தை முஸ்லிமல்லாதவர்களின் நியாயஸ்தலத்திற்குக் கொண்டு போகக் கூடாதென்று இஸ்லாம் ஆரம்ப காலத்திலேயே முஸ்லிம்களை வெகு கண்டிப்பாய் எச்சரித்திருக்கின்றது. மேலும் முஸ்லிமல்லாதவர்களின் கோர்ட்டுகளுக்குத் தங்களின் வழக்கைக் கொண்டுபோகும் முஸ்லிம்கள் தங்கள் கரத்தாலேயே தங்களின் ஈமானையும், இஸ்லாமையும் பாழ்பண்ணுகிறவர்களென்றும் இஸ்லாம் அறிவுறுத்துகின்றது.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தீர்ப்பை அங்கீகரிக்காதோர்க்கு ஹஜ்ரத் உமர் பாரூக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விதித்த சிட்சையே இன்றும் இஸ்லாமியத்தீர்ப்பை ஏற்காதவர்களுக்கு, முஸ்லிம் ஆக்ஷியில் விதிக்கப்படுமல்லவா?

முஸ்லிம் வேடந்தரித்து அந்தரங்கத்தில் காபராகவிருந்த 'முனாபிக்' என்னும் ஒரு நயவஞ்சகனுக்கும், ஒரு யூதருக்கு மிடையில் ஏற்பட்டிருந்த வழக்கைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு இவ்விருவரும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சந்நிதானத்தையடைந்தார்கள். இவர்களின் வழக்கை விசாரித்து நாயகம்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் யூதருக்குச் சாதகமாய் தீர்ப்பளித்தார்கள். ஆனால் இத்தீர்ப்பை அங்கீகரிக்க இஷ்டப்படாத நயவஞ்சகன் ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் தன் எதிரியாகிய

யூதரை அழைத்துச் சென்முன். ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் இவர்களின் வழக்கைச் செவியுற்றூர்கள். ஆனல், "இவ் வழக்கில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எனக்குச் சாதகமாய் தீர்ப்பளித்திருக்கின்றூர்கள்" என்று நயவஞ்சகனின் எதிரியாகிய யூதர் ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் தெரிவித்துக் கொள்ளவே, ஹஜ்ரத் அவர்கள் வாதிபிரதிவாதி ஆகிய இருவரையும் நோக்கி "நீங்கள் இவ்விடத்திலிருங்கள் நான் உங்களுக்குத் தீர்ப்பளிக்கிறேன்" எனக்கூறி வீட்டிற்குட்சென்று ஒருவாளை எடுத்துவந்து முஸ்லிமைப்போலுள்ள நயவஞ்சகனை நோக்கி "உங்கள் வழக்கை யொட்டி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தீர்ப்பளித்து விட்டார்களா." என்று வினவினூர்கள். அதற்கு "ஆம்" என்று இந்நயவஞ்சகன் விடைபகரவே, ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்நயவஞ்சகனை வாளால் வெட்டி விட்டு "நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அளித்த தீர்ப்பை அங்கீகரிக்காதோர்க்கு இதுவே ஏற்ற தீர்மானமாகும்" என்று அறிவித்தார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இவ்வரலாற்றையறிந்து விசனமுற்றிருந்தபோழ்து அல்லாஹுதஆலா அறிவித்ததாவது :

"ஓ நபியே! உங்கள் ஆண்டவன்மேல் சத்தியமாக இவர்கள் தங்களுள் ஏற்படும் எல்லாவழக்குகளையும் தீர்த்துவைப்பதற்குத் தங்களை நியாயாதிபதியாக ஒப்புக்கொண்டு தாங்களளிக்கும் தீர்மானத்தை மனச்சங்கடமின்றி உள்ளும் புறமும் ஒன்றுபோல் அங்கீகரிக்காதவரை இவர்கள் எந்நிலைமையிலும் மூமின்களாகவிருக்க முடியாது." (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

அல்லாஹுதஆலாவின் ரஸூலாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சந்நிதானத்திலேயே எல்லாவழக்குகளையும் முற்படுத்தி இச்சந்நிதானமளிக்கும் தீர்ப்பை மனப்பூர்வமாய் அங்கீகரிப்பதோடு அத்தீர்ப்பை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது ஈமான் உண்டென்பதற்கு அவசியமான பெரும் நிபந்தனை, என்பதை இத்திருமறையின் மூலமாய் நாம் அறியக்கிடைக்கின்றது.

ஆனல் முஸ்லிம்களென்று அழைத்துக்கொள்ளும் சிலர் இன்று பெரும் க்ஷீணதெசையில் சிக்குண்டிருக்கின்றனர். ஆதலின் இவர்கள் இஸ்லாம் மதநிபுணர்களான உலமாக்கள் இஸ்லாம் மதக்கொள்கையை யொட்டியளித்திருக்கும் தீர்ப்புகளுக்குத் தாங்கள் கட்டுப்பட்டவர்களல்லவென்று கூறுகின்றனர். மேலும் முஸ்லிமல்லாதவர்கள் இஸ்

லாம் மதவிஷயத்தில் பிரவேசித்து தீர்ப்பளிக்கும்படிச் செய்வோர் தங்களை உண்மை முஸ்லிம்களென்று கருத நியாயமுண்டா?

முஸ்லிம்களென்று அழைத்துக்கொள்ளும் இவர்கள் உண்மை முஸ்லிம்களாயின், முஸ்லிம்களாயும் இஸ்லாம் மதத்தை ஆராய்ச்சி செய்தவர்களாயுமுள்ள பெரியார்களிடம் கட்டளைக்கு முறணான கட்டளையை முஸ்லிமல்லாதோர் பிறப்பிக்க இடந்தருவார்களா? இஸ்லாம் மதப் பாதுகாவலரும் நபிமார்களின் வார்சுகளுமான உலமாக்களுள் எண்ணிறந்தோர் செய்திருக்கும் இஸ்லாம் மதசம்பந்தமான தீர்ப்பை பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட அதிகாரி என்னும் முறையில் ஒரு கிறிஸ்துவ ஜட்ஜ் ரத்து செய்துவிட்ட விகாரக் காட்சியைக்கண்டு சந்தோஷமுறுவோர் தங்களை முஸ்லிம்களென்று அழைத்துக்கொள்ள ஏன் வெட்கப்படவில்லையோ! தெரியவில்லை.

இஸ்லாம் மதசம்பந்தமாய் முஸ்லிமல்லாதவர்கள் அளிக்கும் தீர்ப்பைக்கண்டு சந்தோஷமுறுவோரை யொட்டி குர்ஆன்ஷரீபிடம் கட்டளையைக்கூட இவர்கள் உற்று நோக்காதிருப்பதேனோ?

"அல்லாஹுத'ஆலா இறக்கியுள்ள (தேவநூலை) நியாயாதிபதி யாக ஏற்றுக்கொள்ளாதோர் (உண்மையாகவே) காபர்களாகும். ஏனெனின்? அல்லாஹுத ஆலாவின் தீர்ப்புக்கு பதிலாய் இதரர்களின் தீர்ப்பை உயர்வுபடுத்துவதைக் காட்டிலும் அல்லாஹுதஆலாவை மறுக்கக்கூடிய பெரும் காரியம் வேறு எதுவுமுண்டா?" (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

"அல்லாஹுத ஆலா இறக்கியுள்ள (தேவநூலை) நியாயாதிபதி யாக ஏற்றுக்கொள்ளாதோர் அநியாயக்காரர்களாகும். ஏனெனின்? அல்லாஹுதஆலா இயற்றியுள்ள சட்டதிட்டங்களுக்குரிய அந்தஸ்தை மானிடர்கள் இயற்றும் சட்டதிட்டங்களுக் களிப்பதைக்காட்டிலும் வேறு பெரிய அநியாயமுண்டா"? (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

அல்லாஹுத ஆலா இறக்கியுள்ள (தேவநூலை) நியாயாதிபதி யாக ஏற்றுக்கொள்ளாதோர் பாதகராகும். ஏனெனின்? அல்லாஹுத ஆலா காட்டியுள்ள வழியைவிட்டு இதரர்களின் வழியை "பின்பற்றுவதைக் காட்டிலும் வேறு பெரிய வழிகேடும், பாபமுமுண்டா?" (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

(தொடரும்)

“பாவஸவனத்திலிட்டக் கூக்குரல்.”

இமாமுல் ஹிந்துமௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களெழுதியது)

‘‘அல்ஹிலால்’’ ஆரம்பமாகி 21-மாதங்களாகின்றன. இன்னம் 3-மாதங்களான பின்னர் 2-ம் வருடம் பூர்த்தியாகிவிடும்.

உலகில் நடைபெறும் மற்றகாரியங்களைப் போலவே ‘அல்ஹிலா’ லும் ஒரு காரியமாகும். இதன் ஒவ்வொரு அங்கங்களும் பணச் செலவைக் கொண்டே தயாராகின்றது. மேலும் இதற்கு மானிடரின் மூளை, தேகம், ஆகியவைகளின் பிரயாசையும் இன்றியமையா தவையா யிருக்கின்றன. உலகில் ஒவ்வொரு வஸ்துவையும் கிரயங் கொடுத்து, வாங்கவேண்டியதாக விருப்பதுபோலவே அல்ஹிலாலுக்கு வேண்டுவனவற்றை; கிரயங்கொடுத்துத்தான் வாங்கவேண்டியிருக்கிறது. அல்ஹிலாலை அச்சிடுவதற்காக ஓர் அச்சுக்கூடம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதற்குவேண்டிய வஸ்துக்களுள் எதுவும் கிரயமின்றி கிடைப்பதில்லை. அல்ஹிலாலானது கடிதத்தில் அச்சிடப்படுகின்றது. இதற்கு மையும் செலவாகின்றது. அல்ஹிலாவில் பிரசுரிக்கப்பட்டு வரும் படங்களுக்குரிய பிளாக்குகளும் செய்ய வேண்டிருக்கிறது. இவைகளெல்லாம் கிரயங்கொடுத்தே வாங்கப் படுகின்றன.

ஒவ்வொரு காரியத்திற்கும் உலகில் ஒவ்வொரு காரியாலயமிருந்து வருவது போலவே அல்ஹிலாலுக்கும் ஒரு காரியாலயமுண்டு. இக்காரியாலயத்திற்கும் தங்கம், வெள்ளி முதலிய நாணயங்கள் வேண்டித் தானிருக்கின்றன. பொருளாதார நிலையில் குந்தக மேற்பட்டு விடாதிருக்கும் பொருட்டு ஓரினத்தைக் கோரும்போது அதற்காக மற்றோரினத்தைக் கொடுக்கவேண்டு மென்னும் பூர்வ முறை, எத்தகை மாறுதலுமின்றி, உலகில் நடைபெற்று வருகின்றது. ஆகவே அவைகளிலொன்றேனும் நிலை நிற்க வேண்டுமாயின் அதற்குரிய செலவுக்குத்தக்க வருவாயிருந்து வரவேண்டும். அல்லது குறைவுபட்டுத் தீர்ந்து போகுமென்னும் அச்சமற்ற பொக்கிஷம் வேண்டும்.

மேற் கூறியவைகள் உண்மையாயும், முக்கியமானவையாயும், மறுக்கக்கூடாதவையாயு மிருக்குமாயின், அல்ஹிலால் நிலைத்திருப்பதற்கு அத்தியாவசியமான பொருளை யொட்டிப்பேச வேண்டியவைகளைப் பேசாமலிருப்பது நியாயமல்ல. பேசவேண்டிய சகல விஷயங்களையும், பேசுவதற்குத் தக்க நா அல்ஹிலாலுக்கிருந்து வரும் நிலை

யில் இந்நா குறிப்பிட்ட சிற்சில சந்தர்ப்பங்களிலேனும் தனக்கின்றி யமையாத வார்த்தைகளைப் பேசுவதவசியமே. ஆனால் அல்ஹிலாலானது தான் நிலைத்திருப்பதற்கு வேண்டியவைகளைப்பற்றி பேசாது மௌனமாகவிருந்து வந்ததை நம் நண்பர்கள் நன்கறிவார்கள்.

உலகில் பொருளைக்கோரி நடைபெறும் வியாபாரங்களிலும் வியாபாரமல்லாத இதர காரியங்களிலும் எதையேனும் உதாரணங்காட்டவியலாத பெருந்தன்மையோடு அல்ஹிலால் தனக்கு அத்தியாவசியமான பொருளாதாரத்தை யொட்டி வார்த்தையாடாமல் மௌனவிரதம் பூண்டு தன் காரியங்களைத் தொடர்ச்சியாய்ச் செய்துவருகிறது.

ஆறுமாதகாலத்து வால்யூம் முடிவடையும்போதும், மறு வால்யூம் ஆரம்பிக்கப்படும்போதும் அல்ஹிலாலின் பொருளாதார நிலையை யொட்டி சில வார்த்தைகளை வெளியிட பன்முறை, யாம் கருதியதுண்டு. ஆனால் அவ்வாறு செய்ய என் ஹிருதயம் இடந்தரவில்லை. ஏனெனின்? அல்லாஹுதஆலாவை யடைவதற்காக முயற்சிக்கும் பொழுது அவனுடைய அடிமைகளின் சமுகத்தில் கையேந்துவது விவேகமற்ற காரியமல்லவா?

அல்ஹிலாலின் பொருளாதாரத்தைப்பற்றி, முன்னர் சில்வரிகளை வரைந்திருக்கின்றேன். ஆனால் போதிய அளவு விரித்தெழுதாமல் அது சமிக்கையாக மட்டுமிருந்தது. ஆதலின் அதை ஒரு சிலரே அறிந்திருக்கக்கூடும். அல்ஹிலாலின் சென்ற வால்யூமின் கடைசி சஞ்சிகையில் "பாலைவனத்திலிட்டக் கூக்குரல்" என்னும் தலைப்பின் கீழ் அல்ஹிலாலுக்கேற்பட்டு வரும் பெருஞ்செலவை யொட்டி, மற்றொரு சமிக்கை செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் வியாபார முறையை ஏற்காத என் இயற்கைக் குணமானது அவ்வமயத்திலும் தெளிவாய் விரித்தெழுதவிடவில்லை.

ஒவ்வொரு காரியத்திற்கும் பழக்கவழக்கம், குணம், ஆகியவைகள் ஒத்திருக்கவேண்டும். ஆனால் வியாபாரத்தைப்போன்ற கொடுக்கல்வாங்கலும் என்குணமும் ஒன்றுக்கொன்று முறண்பட்டனவாகவிருக்கின்றன. ஆகவே அல்ஹிலாலின் பொருளாதார நிலையையொட்டி வார்த்தையாடவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டு வார்த்தையாட சம்மதித்தேன். ஆயினும் அனுபோகமற்ற வியாபாரியைப்போல் இரண்டொரு வார்த்தை பேசுவதற்குள் நா தடுமாறிவிட்டது.

நான் எதைச் செய்யவேண்டுமென்னும் நிர்ப்பந்தத்திற்காளாகின்றேனோ? அதையும் நான் எதை செய்யவேண்டுமெனக்கருதுகிறேனோ? அதையும் அல்லாஹுதஆலா தான் நன்கறியக்கூடும். சத்தியப்பிரசாரம், சீர்திருத்தம் ஆகிய உயரிய காரியங்களை யான் செய்வதாகக்

கூறுகிறேன். ஆனால் வியாபாரஸ்தாபனங்களைப் போலவே நானொரு காரியாலயத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றேன். இக்காரியாலயமானது ஜனங்களிடத்தில் கிரயத்தைப் பெற்று அதற்கீடாக ஒருசஞ்சிகையை அச்சிட்டுப் பரிமாறுகின்றது. ஆகவே என்னுடைய இவ்விழிய நிலையைச் சிந்திக்கும் போழ்து யான் வெறுப்புக் கொள்ளாதிருக்க முடியுமா?

அல்லாஹுதஆலாவின் சிருஷ்டிகளை முன்னேற்றுவதற் குரிய சேவையைப்புரிய வேண்டுமென்னும் உணர்ச்சியோடு கொடுக்கல் வாங்கல் போன்ற வியாபார முறையைச் சம்மந்தப்படுத்த வியலுமா? அல்லாஹுதஆலாவுக்காகச் செய்யப்படும் ஊழியத்தை வியாபார ஸ்தலங்களில் நடைபெறும் காரியத்திற் கொப்பாக்குவது விந்தை யல்லவா? மனோவிச்சை, உயிர் ஆகியவைகளைத்தியாகம் செய்யவேண்டிய இடத்தில் வியாபாரிகள் நடமாடமார்க்கமுண்டா? இலாபத்தையடைய விரும்புவோர், தியாகக்களத்தில் எதையேனும் சம்பாதிக்கவியலுமா? லாபத்திற்குப் பதிலாய் நஷ்டத்தையும், இன்பத்திற்குப்பதிலாய் கஷ்டத்தையும், வரவுக்குப் பதிலாய் செலவையும், அடைவதற்குப் பதிலாய் தியாகஞ்செய்வதையும் விரும்புகிறவர்களேயே இத்தியாகக் களமழைக்கின்றது. ஆனால் மீண்டும் உலகநிலையை உற்று நோக்கின் சீர்திருத்தம், சத்தியப்பிரசாரம் ஆகியவைகளை தொடர்ச்சியாய் புரிவதற்கு இன்று பத்திரிகை யொன்றே ஏற்ற வழியென்னும் தீர்மானத்திற்கு வரவேண்டியதாக விருக்கின்றது. இடைவிடாது ஒரு பத்திரிகையை நடத்தவேண்டுமாயின் அதற்காக ஒரு பெரும் பொக்கிஷத்தை அற்பணஞ் செய்து விடவேண்டும். (என்னிடமோ பொக்கிஷமில்லை. அதற்காக நான் அல்லாஹுதஆலாவைத் துதிக்கின்றேன்) அல்லது பத்திரிகையை அச்சிட்டு வெளியிடுவதற்குரிய செலவுக்கேற்றவாறு பத்திரிகையை வாங்குவோரிடம் கிரயம்பெற சம்மதிக்க வேண்டும். என்னிடம் பொக்கிஷமில்லாததால் இரண்டாவதாகக் கூறியுள்ள முறையை ஏற்றுவேலை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்குட் பட்டிருக்கிறேன்.

அல்லாஹுதஆலாவின் வழிபாட்டிற் குரிய ஊழியத்தைச் செய்யவேண்டுமென்னும் பிரீதி என்னுள்ளத்தில் பலம் பெற்றிராவிட்டால் இத்தகைய இழிய முறையில் பத்திரிகையை நடத்த நான் சம்மதித்திருக்க முடியாதென்னும் உண்மையை அல்லாஹுதஆலா மட்டுமே நன்கறிவான். அல்ஹிலாலை நடத்துவதை யொட்டி நாம் கைகொண்டிருக்கும் முறையையும், எம்நிலையையும் உற்று நோக்கி நியாயத் தீர்ப்பளிப்பீர்களா?

எப்பொழுதேனும் அதிவிசனத்தோடு சந்தாதாரரின் சமுகத்தில் விண்ணப்பம் செய்து கொள்ளப் பட்டிருக்கின்றதா? நம் காரியாலயத்தின் பொருளாதாரத்தை கவனிக்குமாறு சந்தாதாரர்களைத் தூண்டி யிருக்கிறோமா? அடுத்தடுத்து நமக்கே ஏற்பட்டுவரும் பொருள் நஷ்டத்தைச் சார்ந்தவரலாற்றை வெளியிட்டு வந்தோமா? ஒவ்வொருவரும் ஒரு சந்தாதாரரைச் சேர்த்துயனுப்பத்தான் வேண்டுமென்று எப்பொழுதாவது நாம் ஜனங்களிடத்தில் கோரியதுண்டா? பத்திரிகாவுலகத்தில் நடைபெறும் காரியங்களைப் பின்பற்றத் துணிவோமாயின் அல்ஹிலாலின் பொருளாதார நிலையை கவனிக்குமாறு ஒவ்வொரு பத்திரிகையிலும் எழுதப்பட்டுவருமென் பதிலையமில்லை. ஆனால் நாம் அம்முறையை எச்சந்தர்பத்திலும் கையாளாமலிருந்ததை முன்னிட்டு அல்லாஹுதஆலாவைத் துதிக்கின்றோம்.

இரப்பதும், யாசகங்கேட்பதும் உயர்வான நன்முறையையும் இரகசிய வடிவத்தையும் கொண்டிருக்கலாம். ஆனால் இவ்விழிய நடவடிக்கையைச் சார்ந்த எல்லாக்காரியங்களையும் வியாபார முறையையும் நாம் முற்றிலும் அலட்சியஞ் செய்து உதரித்தள்ளிவிட்டோம். ஏனெனின்? கேட்பதற்குரிய சந்நிதானம் ஒன்றேயாதலின் கொடுப்பவர்களிடமெல்லாம் கையேந்துவது விவேகமல்ல. மேலும் அல்லாஹுதஆலாவின் சந்நிதானத்தை நோக்கிக்கோரி நிற்போர் உலகில் ஜனங்களால் கேட்கப்படுகிறவராக விருக்கவேண்டுவதவசியமாகும். மேலும் சத்தியப் பிரசாரத்தைச் சார்ந்த அரிய காரியத்தைப் புரிவோர், தங்களுக்குரிய உயர்வை யலக்ஷியஞ்செய்துவிடலாம். ஆனால் அவர்கள் புரியும் சத்திய ஊழியத்திற் கின்றியமையாத கௌரவத்தைக் காக்கும்பொருட்டு அவர்கள் அரசர்களைப்போன்ற பார்வையையும்,கிரீடாதிபதிகளின் மூளையையும் கொண்டிருக்கவேண்டும்.

அல்லாஹுதஆலாவின் சந்நிதானத்தில் யாசகங்கேட்போர், இதரர்களின் சமுகத்தில் யாசகங்கேட்கவேண்டுமெனக் கருதுமெவரும் உலகில் நிலைத்திருக்கமுடியுமா? அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் கோரிநிற்போரின் சட்டைப்பையில் ஒரு செம்புக்காசேனுமில்லாதிருக்கலாம். ஆனால் அகமும் பெருமையுமுள்ள பெரும் சக்கரவர்த்திகளைக் கிரயம் வாங்கக்கூடிய பல பொக்கிஷங்கள் அவர்களின் ஹிருதயங்களில் மறைந்துகிடக்கும்.

சத்தியப்பிரசாரர்களின் சமுகத்தில் இழியவஸ்துக்களைப்போல் கொண்டுவந்துபோடவும்,சத்தியப்பிரசாரர்கள் உதைப்பதன் மூலமாய் கௌரவத்தைப் பெறவுமே உலகில் பொருளும் சமஸ்தானங்களும்

படைக்கப்பட்டிருக்கின்றன. சத்தியப்பிரசாரர்களின் பாதம் பொருளின்மேல் பட்டு விடுமாயின் பணத்தைப் பூசிப்போர்க்கு பெரும் கீர்த்தியேற்படுகின்றது. ஏனெனின் இப்பணப் பூசாரிகளிடமுள்ள பொருள் தீர்ந்துபோய் விடக்கூடும். அல்லது அதைப்பிடுங்கிக்கொள்ள முடியும். ஆனால் சத்தியப்பிரசாரர்களின் ஸ்வாதீனத்திலுள்ள பொக்கிஷம் குறைவுபடுமா? அல்லது அதைப்பிடுங்கிக்கொள்ள இவ்வானத்திற்குக்கீழே எவனும் சாத்தியப்படுமா? உண்மையான நிலைமை இவ்வாறிருக்கும்போது அல்லாஹுதஆலாவின் வழிபாட்டில் ஊழியம் புரிவதற்குரிய அருளைக் கோருமொருவன் மானிடசகாயத்தைத் தேடக்கூடிய எண்ணத்தைத் தன்மனத்துள்கொள்ள வியலுமா? அல்லாஹுதஆலாவைத் துதித்துப் புகழ்வதற்குரிய நாவை எச்சக்தியுமற்ற அடிமைகளுக்கு நன்றிநிறைவேற்றி அவர்களைக் கெஞ்சி நிற்பதன் மூலமாய் அசுத்தப்படுத்திக்கொள்வது ஆத்மாவின் மரணமும், ஹிருதையத்தின் நாசமுமல்லவா?

உண்மையை வெளியிடுவதற்குரிய பிரசாரமும் மானிட சகாயத்தைக்கோருவதும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாகும். ஆதலின் இவ்விரண்டும் ஓரிடத்தில் இணங்கியிருக்கமுடியாது. அல்லாஹுதஆலாவைத்தவிர வேறு எத்தகைய ஸ்தாபனமும் நா, எழுதுகோல் ஆகியவைகளின் சுயேச்சையைப் பாதிக்க முடியாமலிருப்பது, சத்தியப் பிரசாரத்திற்கின்றியமையாத முதல் நிபந்தனையாகும். ஏனெனின் மானிட சகாயத்தின் சுமையானது உண்மையை நிலைநிறுத்தவேண்டிய சந்தர்ப்பத்தில் (நீங்கள்) அசையமுடியாமல் தடுத்துவிடக் கூடுமல்லவா? மேலும் எவ்வகம்படைத்த சிரசை சத்தியத்தினுயர்வை முன்னிட்டு உண்மை, தெய்வீகப்பெருமை ஆகியவைகளின் மூலமாய் உதைத்துத் தள்ளவேண்டுமோ அச்சிரசின்முன் நீங்களே பணியவேண்டிய நிர்ப்பந்த மேற்படக்கூடுமல்லவா?

நல்லனவற்றை ஏவிக் கெடுதியை யகற்றவேண்டுமென்னும் அரிய சேவை, க்ஷீணித்துப் போனதைச்சார்ந்த இஸ்லாமிய சரித்திரத்தை உற்று நோக்குங்கள். நாளடைவில் உண்மையான உலமாக்கள் குறைந்துபோனதோடு கெட்ட உலமாக்கள் அரசர்களுடையவும் பணக்காரர்களுடையவும் சமுகத்தையடைந்து தங்களுக்கு வேண்டியவைகளைக்கோரி சாஷ்டாங்கஞ்செய்யஆரம்பித்ததே அவ்வரிய சேவை குந்தகப்பட்டதற்குப் பெரும் காரணமென்பதைத் தெரிந்துகொள்ளலாம். அரசர்களுடையவும், பணக்காரர்களுடையவும் சகாயத்தின் மூலமாய் கழுத்தில் போடப்பட்டிருக்கும் விலங்கானது இக்கெட்ட உலமாக்களை வேலைசெய்யவிடாமல் தடுத்துவிட்டது.

நல்லனவற்றை ஏவி கெடுதியை யகற்றுவதென்னும் இல்லாமிய அரும் ஊழியத்தைச்சார்ந்த சப்தத்தை நீங்கள் இன்று இல்லாமிய உலகில் செவியுற முடியாது. ஏனெனின் பாதகர், துஷ்டர், பொல்லாதவர், அநியாயக்காரர், எதேச்சாதிகாரமுள்ளோர் ஆகியவர்களிடம் தங்கம், வெள்ளி முதலிய நாணயங்களிருக்கின்றன. மேலும் அவர்கள் நாய்களின்முன் சில ரொட்டித்துண்டுகளைப் போட்டுவிடக்கூடிய சூனியத்தை நன்கறிந்திருக்கின்றனர். ஆகவே எழுதுகோல் கட்டப்பட்டிருக்கின்றன. நாக்கள் தைக்கப்பட்டிருக்கின்றன. சத்தியத்தின் தைரியம் பேராசையின் கோயிலில் பலியாகின்றது. முழு உலகத்திலுமுள்ள சகல பொக்கிஷங்களைக்காட்டினும் உயர்வான அரும்பொருளையும், அல்லாஹுத ஆலாவின் நபிமார்களுடைய பரிசுத்தமான அமானிதத்தையும், தங்கம், வெள்ளி முதலிய அற்பவஸ்துக்களுக்கீடாக விற்கப்படுகின்றன.

* * * *

ஜனங்கள் ஐசுவரியத்தை யடைவதற்காக அதன்பின் தொடர்ந்து செல்லுகின்றனர், ஓடித்திரிகின்றனர், கீழேவிழுந்து புழுதியில் புரளுகின்றனர். இத்தனை கஷ்டத்திற்குட்பட்டும் ஜனங்கள், தாங்கள் கோரியவற்றை யடையக்கூடவில்லை. ஆனால் நான் கோராமலேயே அது என்னிடம் ஏராளமாக விருக்கின்றன. இவ்வரிய நிலைமை அல்லாஹுத ஆலாவின் பூரண கிருபையேயாகும். மற்றவர்கள் கோரிக் கஷ்டப்படும் பணத்தை நான் ஜனங்களிடமிருந்து அடைய விரும்புவேனாயின், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது என்முன் குவிந்து கிடப்பதைப் பார்க்கலாம். மேலும் ஜனங்களிடம் கோரி நிற்பதற்குப் பதிலாய் நான் அவர்களுக்குச் சன்மானஞ் செய்பவனாக விருப்பதில் எனக்கு பெருமின்ப முண்டாயிருப்பதையொட்டி அல்லாஹுத ஆலாவைத் துதிக்கின்றேன். தன்னைநோக்கி நீட்டப்படும் கைகளுக்குச் சன்மானஞ்செய்யக்கூடிய கையானது பிறரிடம் யாசிக்க முற்படுமா?

அல்ஹிலாலின் ஆரம்பகாலத்தில் ஒரு தயாள சிந்தையுள்ள சமஸ்தானாதிபதி 2,000- ரூபாய்ச்செக்கை யனுப்பியதோடு சதா ஒவ்வொரு வருடமும் 1,800- ரூபாய் யனுப்பிவருவதாக வரைந்து இன்னின்ன விஷயங்களைக் குறிப்பாய்க் கவனித்து வரவேண்டுமென்றும் கோரிக்கொண்டார். ஆனால் அதை நான் அவ்வமையமே நன்றியும், ஆசியுங்கூறி திருப்பியனுப்பிவிட்டேன். இச்சம்பவத்தையொட்டி முன்னொரு சமயம் அல்ஹிலாலில், "இத்தகைய சன்மானத்திற்கு நான் அருகதையுள்ளவனல்லன் என்னை கிரயத்திற்கு வாங்கவேண்டுமாயின் ஒரு கூடை வைக்கோலைக்காட்டினும் அதிகக்கிரயம் வேண்டியதில்லை.

ஆனால் என்னபிப்பிராயத்தை கிரயம் வாங்கவேண்டுமெனக் கருதப்படு மாயின் அதற்குரிய கிரயத்தை உலகிலுள்ள எல்லா சக்கரவர்த்திகளும் சேர்ந்து செலுத்தமுடியாது. உண்மை இவ்வாறிருக்க உங்கள் சமஸ்தானத்தினுடையவும், மாளிகையினுடையவும் நாமத்தை வெளியிட்டுக்கொண்டு என்முன் வரமுடியுமா " என்று வரைந்திருக்கின்றேன்.

அல்லாஹுத ஆலாவின் கிருபையால் பல சமஸ்தானாதிப திகளும் தனவந்தர்களுமிருக்கின்றனர். நான் கோருவேனாயின் அவர்கள் அல் ஹிலாலின் செலவுக்காக மிகப்பெருந்தொகைகளை என்னிடம் ஒப்பித்து விடுவார்களென்பது திண்ணம். மேலும் அவர்களுள் சிலர் எனக்குப் பன்முறை இதையொட்டி எழுதியிருக்கின்றனர். ஆனால் நான் சதா மறுத்துக்கொண்டே வருகிறேன். ஜனங்களுக் கறிவுருத்துவதற்காக மட்டும் நான் இதை வரைந்திருக்கின்றேன். ஏனெனின்? அல்ஹிலால் ஒரு நவீன முறையைக் கொண்டதும் இதன் சப்தம் செவியுறத்தகா தது என்றும் பலர் கருதியிருந்தனர்.

" அல்ஹிலாலே அதன் கடும்பதம், இனிமையற்ற அபிப்பிராயம் ஆகியவைகள் அழித்துவிடும். அல்லது அரசாங்கத்தின் ஏதேச்சாதிகாரமுறை அல்ஹிலாலே நடைபெறவொட்டாமல் தடுத்துவிடும்" என்று கூறிவந்தனர். ஆனால் அல்லாஹுத ஆலா அல்ஹிலாலுக்குப் புரிந்த ஆதரவையும், சகாயத்தையும் அளவிடமுடியுமா? அல்லாஹுத ஆலா பிரத்தியோகமாய் அல்ஹிலாலுக்கு மற்றொரு தயவையு மளித்திருக்கின்றான். அஃதாவது :—" ஜனங்கள் மற்ற பத்திரிகைகளின் கிரயம் குறைக்கப்படவேண்டுமென்று கருதுகின்றனர். ஆனால் அல்ஹிலாலின் கிரயத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று தாமாகவே நமக்கெழுதி வருகின்றனர். "

* * * *

மேற்கூறியவைகள் அல்ஹிலாலே வாசிப்பவர்களைச்சார்ந்த வரலாறாகும். மேலும் என் குடும்பத்தையொட்டிய குறிப்பான வகுப்பும், எங்கள் ஆத்மார்த்தீக வழிச்சகோதரர்களும் என்மீது கொண்டுள்ள நட்பிற்கெல்லேயே கிடையாது. என்னறியாமையையும் இழிய நிலையையும் உற்றுநோக்கும்போது அவர்கள் என்மீதுகொண்டுள்ள நட்பானது எனக்கு பெரும் ஆச்சரியத்தை மூட்டுகின்றது.

அல்லாஹுத ஆலா தன் கிருபையை முன்னிட்டு எனக்கு உண்மையான பலநண்பர்களை யளித்திருக்கின்றான். அவர்கள் தங்கள் உயிர், பொருள், ஆகிய இரண்டையும் என்னிடம் ஒப்பித்துவிட்டார்கள். ஏனெனின்? யான் என் உயிர், பொருளோடு அவர்களின் உயிர், பொருள் ஆகியவைகளையும் அல்லாஹுத ஆலாவின் வழிபாட்டில் அற்

பணஞ் செய்யக்கருதியிருக்கிறேனென்று அல்லாஹுதஆலா அவர்களின் ஹிருதயத்தில் போட்டுவிட்டான். மேலும், இவ்வமயமே, அவர்களினில்லத்திலிருப்பவைகளைச் சேகரித்து என் வாசலில் கொண்டுவந்து குவித்து விடும்படி கட்டளையிடுவேனாயின் சில நிமிஷங்கள் கூட தாமதியாமல் என் உத்தரவை நிறைவேற்றுவோர் பலரிருப்பதை நான் அறிவேன்.

மியான் முஹக்கமுத்தீன் என்னும் நண்பரின் மனோநிலையை யொட்டி நான் ஆச்சரியப்படாமலிருக்க முடியவில்லை. அவரிடமிருந்து நான் எதையேனும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தை அவர் சதாகொண்டிருக்கிறார். இரவு 2-மணிக்கு நான் ஒரு சாதாரண வேலைக்காரனை அவரின் கடைக்கனுப்பி 15,000-ரூபாய் வேண்டுமென்று அறிவிப்பேனாயின் உடனே எடுத்துக் கொடுத்துவிடுவார், என்னும் நம்பிக்கை எனக்குண்டு. இவ்வாறே ஷைக் முஹம்மத் ஹுஸைன் சாஹிப் என்னும் நண்பர் அல்ஹிலாலுக்கு ஜாமீன் கேட்கப்பட்டிருக்கிறது, என்னும் செய்தியையறிந்ததும், ஜாமீன் தொகை 10,000-ரூபாயாக மிருக்கலாமெனக்கருதி உடனே நாகப்பூரிலிருந்து "அல்லாஹுதஆலாவை முன்னிட்டு என் 10,000- ரூபாயை ஒப்புக்கொள்ளவேண்டு" மென்று தந்திகொடுத்தார்.

ஆனால் நான் அதை திருப்பியனுப்பிவிட்டு, "ஜாமீன் தொகை கொடுத்தாகிவிட்டது, தங்களின் தொகை எனக்கவசியமில்லை, அல்ஹிலாலை நிறுத்திவிடுவேன். ஆனால் ஜாமீன்கட்டும் கஷ்டத்தை பிறர் சுமக்கும்படி நான் விடேன்" என்று எழுதியிருக்கின்றேன்.

மியான் அஹ்மத்அலீ, ஷைக்குலாம் ரஹ்மான் சாஹிப், மியான் ஜுபைத்அலீ, மியான்மௌலா பக்ஷ் முதலிய நண்பர்களையும் நான் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. இவர்கள் பொருளைமட்டுமின்றி எனக்காக உயிரையும் தியாகஞ்செய்யக்கூடிய ஆவலை அல்லாஹுதஆலா இவர்களின் ஹிருதயத்தில் உண்டுபண்ணியிருக்கின்றான். மேலும் நூற்றுக்கணக்கான என் உண்மை நண்பர்கள் என்மீதுகாட்டும் அவசியமற்ற பிரீதியை யடக்கும்பொருட்டு நான் கூறும் கொடியபதங்களை பின்னர் சிந்தித்து கவலையும் வெட்கமுமடைவதுண்டு.

* * * *

மேற்கூறியவைகளை இதுவரை நாம் வெளியிடவில்லை, என்பதை சகலருமறிவர். நாம் இஷ்டப்படுவோமாயின் இரச்சலும் சந்தடியுமின்றியே நம் காரியத்திற்கு வேண்டுமளவு பிறரின் பொருளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் அல்லாஹுத

ஆலா நமக்களித்திருப்பதை ஜனங்களுக்கறிவுறுத்த வேண்டுமென்ப, தற்காகவே இச்சில விஷயங்களை வரைந்துள்ளோம்.

அல்லாஹுதஆலா தன்கிருபையினுல் நமக்குப் புரிந்திருக்கும் எண்ணிறந்த கிருபைகளோடு குறைவும் அழிவுமற்ற மற்றொருபொக்கிஷத்தையும் அளித்திருக்கிருன். இப்பொக்கிஷத்தை நாம் எச்சந்தர்ப்பத்திலும் இழந்துவிட இஷ்டப்படோம். "நம் காரியத்தையொட்டி மானிடர்களின் சமுகத்தில் யாசகங் கேட்காமலிருப்பதோடு மானிட சகாயத்தை அங்கீகரிப்பதில்லை" என்பது நாம் ஆரம்பத்திலேயே செய்துகொண்ட தீர்மானத்துள் ஒன்ருகும்.

நற்காரியங்களை முன்னிட்டுப் பிறரின் ஆதரவைப்பெறுவது அவர்கள் புரியும் சகாயமல்லவென்றும் இதன் மூலமாய் அவர்களின் மீதே சகாயம் செய்யப்படுகிறதென்றும் கூறுவதுண்மையே. ஆனல் எத்தகைய நற்புகலை யொட்டியும் "அல்ஹிலால்" மானிட சகாயத்தின் பளுவைச் சுமக்கும்படி செய்ய நாம் சம்மதிக்க முடியாது.

(தொடரும்)

ஆங்கிலங் கற்போர் கவனிப்பார்களா?

முழு உலகிலும் மராக்கோ முதல் ஸ்பெயின் வரையில் 45-கோடி முஸ்லிம்கள் வசிக்கின்றனர். இப்பெருந்தொகையினரான முஸ்லிம்கள், எவ்வரியகாரியத்தையும் நடத்தி வைக்கக்கூடுமென்பதை, எவரும் மறுக்கவியலாது. ஆனல், ஒவ்வொரு நாட்டைச் சார்ந்த முஸ்லிம்களும், இஸ்லாம் அங்கீகரிக்காத மதபக்தியிலும் தேசாபிமானத்திலும் சிக்குண்டிருக்கின்றனர். ஆதலின் ஒவ்வொரு தேசத்து முஸ்லிம்களும், தத்தம் தேசத்தின் முன்னேற்றத்தைக் கருதிப் பல காரியங்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பர்ஷியா, துருக்கி, எகிப்து, ஆகிய தேச முஸ்லிம்கள், முஸ்லிமுலகின் முன்னேற்றத்திற்குரிய நடவடிக்கையில் அநேகமாய் உள்ளன்பு கொண்டிருக்கவில்லை. இந்தியா, ஆப்கன், சைன, மலாயா, மத்தியஆசியா, வடஆப்ரிக்கா ஆகிய தேசங்களிலுள்ள முஸ்லிம்களுள், சைன, மலாயா தேச முஸ்லிம்களினிடை தேசாபிமானமென்பதே கிடையாது என்று கூறலாம். ஆனல் மற்ற நாட்டு முஸ்லிம்களைக் காட்டினும் இந்திய முஸ்லிம்கள் முன்னேற்ற மடைந்தவர்களென்று பெரும்பான்மையோர் கருதுகின்றனர். ஆயினும் சமீப காலத்தில் நம் நாட்டிற்குக் கிடைக்கவிருக்கும், ராஜீய சுதந்தரங்களை அனுபவிப்பதற்குரிய வழியில் இந்திய முஸ்லிம்கள் முயற்சிக்கவில்லை.

ஆகவே, கிலாபத்தியக்கத்தை முன்னிட்டு, முஸ்லிம் உலகம் நமக்களித்திருந்த கௌரவத்தை நாம் பறிகொடுக்க நேரிடுமோ வென்றும், சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. முஸ்லிம் உலகின் ஒற்றுமையை முன்னிட்டு வேலைசெய்ய ஆரம்பித்த முக்கியஸ்தர்கள், அகௌரவத்திற்கிலக்காகி விடுவார்களாயின், மீண்டும் இவர்கள் முஸ்லிம் உலகிற்கு நல்வழி காட்டுவதெங்ஙனம்?

மதம், தேசீயம், ராஜீயம், வியாபாரம், விவசாயம், முதலிய ஒவ்வொரு துறையிலும் இன்று இந்திய முஸ்லிம்கள் க்ஷீணித்து விட்டனரென்பது திண்ணம். இதற்குக் காரணம் இவர்கள் கற்கும் வைதீக, லௌகிகக் கல்விமுறை யென்றே கூறலாம்.

முஸ்லிம்களுள் கல்வி கற்றோரை இருவகுப்புகளாகப் பாகுபாடு செய்யலாம். இவ்விரு வகுப்பிலொன்று உலமாக்களைக்கொண்டதாகும். இவ்வகுப்பார், மதரஸாக்களில் அரபிக் கல்வியைக் கற்றிருக்கின்றனர். மற்றொரு வகுப்பினர் ஆங்கிலக்கல்வியைப் பயின்று பட்டதாரிகளாக விருக்கின்றனர். கல்வியைப் பெறாத மற்ற முஸ்லிம்கள், மேற்கூறிய இருவகுப்புகளிலொன்றைப் பின் பற்றுகின்றனர். ஆனால் எழுதப் படிக்கத்தெரியாத ஏழை முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் மௌல்வி, சூபி, பீர், முதலிய பெரியாரின் சங்கிலியில் கட்டுண்டு கிடக்கின்றனர். மதப்பெரியாரென்று விளங்கும் இவர்களால் உண்மையில் முஸ்லிம் சமூகத்திற்குக் கௌரவ மேற்படுவதாகத் தெரியவில்லை. ஆயினும் இச்சந்தர்ப்பத்தில் அவர்களின் உண்மை நிலையை யொட்டி எதையும் விரித்து எழுத முடியாது.

நாளுக்கு நாள் பொதுமக்கள், ஆங்கிலக்கல்வி கற்றோரின் ஆதிக்கத்திற்குட்பட்டுக் கொண்டே வருகின்றனர். ஆகவே இவ்வாங்கிலக் கல்வி கற்றோரின் மூலமாய் இஸ்லாமுக்காவது, முஸ்லிம் உலகத்திற்காவது, இந்திய முஸ்லிம்களுக்காவது, எத்தகைய நன்மையும் ஏற்படாததைக் கண்டு வருந்துகிறோம். மேலும் ஆங்கிலக் கல்வி கற்றோரின் பழக்க, வழக்கம், செய்கை முதலியவைகள், இஸ்லாமுக்கும், முஸ்லிம் சமூகத்திற்கும் க்ஷீணதிசையையுமுண்டுபண்ணி வருகிறதென்னும் முடிவு ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் மதப்பெரியார்களென்னும் 1-வது வகுப்பாரைச் சீர்திருத்துவதைக் காட்டினும், ஆங்கிலக்கல்வி கற்ற இவ்விரண்டாவது வகுப்பாரைச் சீர்திருத்துவது இலகுவான காரியமாகும். ஏனெனின், இஸ்லாம் என்னும் விருக்ஷத்தைச்சார்ந்த இவ்விரண்டாவது கிளை ஆரம்பப்பருவத்தைக் கொண்டதாக விருப்பதால், இக்கிளை எத்தகைய நன்முறையையும் ஏற்றுக்கொள்ளுமென்பது திண்ணம். இவ்விரண்டா

வது வகுப்பாருள் ஏற்பட்டிருக்கும் விசனகரமான ஒருவியாதியை நாம் அகற்றிவிடக் கடமைப்பட்டிருக்கிறோம். அஃதாவது :—"இஸ்லாமின் வருங் காலமுன்னேற்றத்தைச்சார்ந்த நம்பிக்கையை இவர்கள் இழந்து போகும்படிச் செய்யப்பட்டிருக்கின்றனர்." ஆகவே, இவர்களின் சுயேச்சை, முன்னேற்றம், ஆகியவைகளின் மூலமாய் இஸ்லாமுக்கும், மானிட வர்க்கத்திற்கும், பெருத்த குந்தகமேற்பட்டு வருகின்றது. ஒரு தலைச்சார்பாயும், உண்மைக்கு மாறாயும் வரையப்பட்டிருக்கின்ற சரித்திரங்களை பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் படித்துவரும் ஆங்கிலக்கல்விகற்றோர் இந்நம்பிக்கைக்குறைவுக்கிலக்காவது இயல்பே.

ஆங்கிலக் கல்விகற்றோர் 12-வயது முதற்கொண்டு இப்பொய்ச் சரித்திரங்களையே படித்துவருவதால், இச்சரித்திரங்கள் ஆங்கிலங்கற்கும் மாணவர்களின், கொள்கையில் பெரும் விபரீதத்தை யுண்டுபண்ணி விடுகின்றன. ஆதலின், ஆங்கிலங்கற்ற இம்மாணவர்கள் தங்களை சமூகச்சேவை புரியத்தக்க யோக்கியதை யற்றவர்களென்றும், தங்கள் சமூகம் உபயோகமற்ற நிலையிலிருக்கிறதென்றும், தீர்மானித்து விடுகின்றனர்.

மார்ஸ்டன், தாம்சன், டிலாபோஸ், ஸ்மித், லேயன்பூல் முதலியோராலியற்றப் பெற்றிருக்கும் சரித்திர புஸ்தகங்களையே, இன்றும் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் படித்துக் கொடுக்கப்படுகின்றனவென்பதை யறியாதாரில்லை. ரஞ்ஜீத்சிங், சிவாஜி, முதலிய ஹிந்து அரசர்கள் உண்மையில் பெரிய அரசர்களாகவிருந்தும் அவர்கள் முஸ்லிம்களை அருவருத்து வந்திருக்கும் ஸ்திதியில், நாம் ஏன் ஹிந்துக்களை அருவருக்கக் கூடாதென்று, முஸ்லிம் மாணவர்கள் சிறுபிராய முதற்கொண்டே கருதவேண்டிய முறையிலும், இஸ்லாமிய அரசர்கள் இரக்கமற்றவர்களென்றும், சமயோஜிதமான ஆலோஜனை, விவேகம் ஆகியவைகளை முஸ்லிம் மன்னர்கள் கொண்டிருக்கவில்லையென்றும், மாணவர்களாகிய நாம் உணரக்கூடிய சிறிய விஷயங்களைக்கூட, அம்முஸ்லிம் மன்னர்கள் அறிந்திருக்கவில்லையென்றும், மஹ்மூத் கஜனவீ கொள்ளைக்காரராக விருந்தாரென்றும், அலாவுத்தீன் கல்ஜீ சிம்மாசனத்தை யடையவேண்டு மென்னும் ஆவலையொட்டி, தன்மீது நட்புகொண்டிருந்த, சிறிய தந்தையைக் கொலைசெய்யத்தக்க பாதகராக விருந்தாரென்றும், நம்பக்கூடிய முறையிலும் இச்சரித்திரங்களை வேணுமென்றே இயற்றி யிருக்கின்றனர்.

மேலும், இம்மாணவர்கள், மொகலாய்ச் சக்கரவத்திகளின் வரலாற்றைப் படித்துவிட்டு ஜிஹாங்கீர், சாராயமருந்துகிறவரென்றும் சிற்றின்பப் பிரியரென்றும், ஆலம்கீர் (ஔரங்கசீப்) முன்யோசனை

யற்றவரென்றும், வடஇந்தியாவில் இந்துக்கள்புரிந்த அராஜகக் கிளர்ச்சியை யொழிப்பதற்கு முயலாமலேயே, தக்ஷணதேசத்து முஸ்லிம் மன்னர்களிடம் போர்புரியச் சென்றாரென்றும், வாய்கூசாமல் கூறத் துணிந்து விடுகின்றனர்.

இம்மாணவர்கள் ஆங்கிலநாட்டுச்சரித்திரங்களைப் படித்துவிட்டு ஆங்கிலேயர் நாகரீகம், முன்னேற்றம் ஆகியவைகளை யடைந்தவர்களென்றும், அவர்களின் சைனியங்கள் தக்கமுறையோடு அமைக்கப்பட்டிருக்கின்றன வென்றும், அவர்களின் ஜெனரல்கள் விசேஷ நிபுணத்துவம் படைத்தவர்களென்றும், நிஜாமை ஏமாற்றி பிரான்சையும், திப்பு அரசரையும் தோல்வியுறச்செய்த ஆங்கிலேயரின் சாமர்த்தியத்தை மெச்சவேண்டுமென்றும், ஆற்காடு, பிளாசி ஆகியவைகளைக் கைப்பற்றிய வரலாறு ஆச்சரிக்கத்தக்கனவல்லவாவென்றும், பின்னர் சிறுகச்சிறுக முழுஇந்தியாவையும் ஆங்கிலேயர் சுவாதீனஞ் செய்துகொண்டது புகழுக்குரியதல்லவா வென்றும், லார்டு பட்டீம் டெல்ஹௌஸ் முதலிய ஆங்கில நிபுணர்கள் மகாமேதாவிகளல்லவா, வென்றும், ஆங்கிலேயரின் பொருட்டால் இந்நாட்டில் ரயில், தபால், முதலிய சௌகரியங்கள் ஏற்பட்டுவிட்டன வென்றும், அரையணா தபால் கார்டின் மூலமாய் வெகு தொலையிலுள்ள என் தந்தையின் சுகத்தை யறிந்துகொள்ள முடிகிறதென்னும், இத்தகைய நன்மைகளுக்குக் காரணமாக விருந்த ஆங்கிலேயர்களுக்கு பிரதிபலனாக இவர்களை வங்காள நவாப்கள் (Black Hole of Calcutta) என்னும் இருட்டறையில் அடைத்து பொழுது கிளம்புவதற்குள் இவர்களில் பலர், தாகவரட்சையாலும், உஷ்ணம்பொறுக்க முடியாமலும் மரணமடைந்து விட்டார்களல்லவா வென்றும் கூறுவதைப் பார்க்கலாம்.

இந்தியாவின்மீது, கௌரீ, கஜனவீ, ஆகிய மன்னர்கள் படையெடுத்தபோது இந்துஸ்தானத்தில் பட்டான்களும், டெல்லியில், மொகலாய் அரசர்களும், ஆட்சிப்பொறுப்பை யேற்றிருந்தார்கள். அவ்வமையம் ஐரோப்பாவின் நிலை இந்தியாவைக் காட்டினும், அதிக விபரீதமாக விருந்தது. இந்தியாவில் மதவேற்றுமை பலவிருந்தும் ஐரோப்பாவில் கிறிஸ்தவர்களுள் நடைபெற்ற யுத்தங்களைப்போல் அபரிமிதமாக இந்தியாவில் நடைபெறவில்லை.

இந்தியாவில் அமைதிநிலவியிருந்த காலத்தில், வாசி, செண்ட் பர்த்லிமோ, பிரோக் ஆகியவர்கள் மிருகத்தனமான காரியங்களைப் புரிந்து கொண்டனரல்லவா? கத்தோலிக், ப்ரோடெஸ்டெண்டு ஆகிய இருகிறிஸ்துவ வகுப்புகளும் ஒன்றை மற்றொன்று பார்த்து சகிக்கக் கூடாதனவாக விருக்கவில்லையா? ஒரு கிறிஸ்துவ வகுப்பு மற்றொரு

வகுப்பைச் சார்ந்த கிறிஸ்தவர்களை உயிரோடு நெருப்பில் போட்டு எரித்து சாம்பலாக்கவில்லையா? கத்தோலிக் கிறிஸ்தவர்கள் ப்ரோடெஸ்டெண்டு கோயிலையும், அதில் வணக்கம் புரிந்தவர்களையும் எரித்து சாம்பற்குவியலாக்கிய வரலாற்றை உலகமறியாதா?

ரோம் தேசத்துப் போப், கிரேக்கர்களின் பெரிய பாதிரியாரோடு யுத்தம் புரிவதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தயாராகவிருந்தாரென்பதை மறைக்க வியலுமா? கல்விகற்பதை பெரும் குற்றமெனக்கூறி, கல்வியின் மீது பிரியங்கொள்ளுவோர் மேல் நாட்டில் சிட்சிக்கப்படவில்லையா? பட்டான், மொகலாய் ஆகியவர்கள் காலத்தில் கல்வி, கைத்தொழில், சிற்பம் முதலியவைகள் இந்தியாவில் முன்னேற்றமடைந்திருந்ததைப் போல், ஐரோப்பாவில் அந்நாளில் முன்னேற்றமடைந்திருந்ததா?

வார்சுகிரம உரிமையை முன்னிட்டாவது, யுத்தஞ்செய்து ஜெயித்ததன் மூலமாவது ஆங்கிலேயர்களுக்கு இந்தியா கிடைக்கவில்லை. ஆனால் ஆங்கிலேயர்களின் அருவருக்கத்தக்க சூழ்ச்சியினாலும், இந்தியரின் கபடமின்மையினாலும், இந்தியா ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டுவிட்டது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன், உலகில் முன்னேற்ற மடைந்திருந்த நாடுகளிலெல்லாம் முதன்மை யாகவிருந்த இதே இந்தியாவானது ஆங்கில ஆட்சியின்பயனாக இழிய நிலையிலிருந்து வருகிறது. அதிபாதாளத்தில் கிடந்த ரஷியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் சமீபகாலத்தில் முன்னேற்ற மடைந்திருக்கின்றன. 50-வருடத்து முயற்சியின் பயனாகவே ஜப்பான் முன்னேற்ற மடைந்ததல்லவா? இந்தியா இன்று சுயேச்சையையடைந்து விடுமாயின் சில வருடங்களுக்குள்ளேயே இந்தியா உலகில் ஓர் உயர்தர நாடாக விளங்குமென்பது திண்ணம்.

அலாவுத்தீன் கலஜிக்கும் ஔரங்கஜீப்புக்கு மிடையில் நடைபெற்ற வகுப்புச் சண்டையை யொட்டி ஆச்சரியப்பட முடியாது. ஏனெனின், ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவர் முதலிய ஒவ்வொரு மதத்தைச் சார்ந்த அரசர்களும் சிற்சில விஷயங்களை முன்னிட்டு போர்புரியும்படி நேர்ந்திருக்கின்றனவல்லவா? ஐரோப்பாவில் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு காலத்திலும், இத்தகையவகுப்புச் சண்டைகள் ஏராளமாய் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, உலகசரித்திரங்களைப் போதிய வளவுதெளிவான முறையில் தெரிந்துகொள்ள முடியாதிருக்கின்ற நிலைமையில், நாம் எவர்மீதேனும் குற்றஞசாட்டுவது நியாயமா? (Black Hole of Calcutta) கல்கத்தா இருட்டறையை யொட்டி அறிவிக்கப்பட்டுவந்தவைகளெல்லாம் ஆதாரமற்ற பொய்க்கதையென்று

நிச்சயமாகி விட்டதல்லவா ? இது போன்ற கட்டுக்கதைகளை நிறப்பி வரையப்பட்டிருக்கும் சரித்திரப் புத்தகங்களை மட்டும் வாசித்து விட்டு, நாம் ஒரு முடிவுக்குவருவது விந்தையல்லவா ?

இத்தகைய சரித்திர புத்தகங்களின் மூலமாகவே, முஸ்லிம் மாணவர்கள் பெரும் க்ஷீண திசையிற் சிக்குண்டிருக்கின்றனர். இவர்கள், சுயேச்சையாய் எதையும் செய்ய முடியாதென்று கருதுகின்றனர். முன்னோர்களின் உயர்வு, குணாதிசயம், சிறப்பு ஆகியவைகளை யறிவதன் மூலமாய் மனிதர்களின் உள்ளத்தில் சுயமதிப்பும், நம்பிக்கையும், உண்டாகக்கூடும். ஆனால், முஸ்லிம் மாணவர்கள் தங்களின் முன்னோர்கள் மீது அருவருப்பையும், துவேஷத்தையும் கொள்ளும்படி, இச்சரித்திர புத்தகங்கள் வேலை செய்கின்றன. உண்மை இவ்வாறிருக்க, முஸ்லிம் மாணவர்கள் தங்களின் முன்னோர்களைப் பின்பற்றி வேலை செய்யவேண்டுமென்னும், ஆவல் ஏற்படமார்க்கமில்லாது போய் விடுகிறது.ஐரோப்பிய சரித்திர ஆசிரியர்களில் 100-க்கு 90 நபர் வீதம் பிசகாகவே புத்தகங்களை இயற்றிருக்கின்றனர். ஆதலின், அப்புத்தகங்களைமட்டும் படித்துவிட்டு ஹிந்து ராஜாக்களைப்பற்றியும், முஸ்லிம் மன்னர்களைப்பற்றியும் எவ்விதமுடிவையும் செய்து விடாமல், உண்மை விஷயங்களைத் தெரிந்து கொள்ள முஸ்லிம் மாணவர்கள் முயலவேண்டும்.

முஹர்ரம் மாதமும், ஓர் அரிய உபதேசமும்.

“முஹர்ரம்” மாதம் முதற்கொண்டே இஸ்லாமிய வருடம் ஆரம்பமாகிறது. உண்மையில் “முஹர்ரம்” என்னும் அரபிபதம், மேன்மை, உயர்வு என்பனபோன்ற பொருளையே தருகின்றது. மேலும் “கர்பலா” வின் துக்க நிகழ்ச்சிக்கு முன்னர் இம்மாதம் துக்கங்காப்பதற்குரிய மாதமென்று கருதப்பட்டதில்லை. ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இம்மாதம் 10-ம் தேதி “கர்பலா” வென்னும் தெரந்தவெளியில் ஷஹீதானதைமுன்னிட்டு, இது துக்கத்தை மூட்டக்கூடிய மாதமென்று பொதுஜனங்கள் கருதுகின்றனர்.

ஆனால் நாம் உண்மையை உற்று நோக்குவோமாயின் இம்மாதம் மிக்கமேன்மையும், சிறப்புமுள்ளது, என்னும் முடிவுக்கு வருவோம். ஏனெனின் ? நமது நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பேரராகிய ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்

லாஹு அன்ஹு அவர்கள் அநியாயத்தை எதிர்த்து உண்மையை நிலை நிறுத்தும்பொருட்டு தங்களுயிரையும், தங்களின் பிள்ளைகள், சுற்றத்தார், சிநேகிதர், அடிமை முதலியோரின் உயிர்களையும் தியாகஞ் செய்தது, முஸ்லிம் சமூகத்திற்கும்பெரும் கௌரவமேயாகும்.

ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை விசுவசிப்பவரெனக்கூறும் ஒவ்வொரு முஸ்லிமும் ஹஜ்ரத் அவர்களைப் பின்பற்றி உண்மையை நிலைநிறுத்தும்பொருட்டு உயிர்,பொருள், முதலியவைகளைத் தத்தஞ்செய்வது கடமை என்றுணர்த்தக்கூடிய சம்பவத்தையொட்டி, முஸ்லிம்கள் நன்மை பயக்காதமுறையில் துக்கங் காக்க வியலுமா? ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ், அல்லாதவைகளை ஒதுக்கித்தள்ளி, அல்லாஹுத ஆலாவின் மீதுமட்டும் அதிகப்பிரீதியைக் கொண்டிருந்ததனால், அசத்தியத்தை எதிர்த்து தங்களின் உயிரைத் தியாகஞ்செய்துவிட்டார்கள். எனவே, அல்லாஹுத ஆலாவிடத்தில் மட்டும் நட்புக்கொண்டிருப்பதாய்க் கூறுவோர், பொய்யரல்லவாயின், அநியாயத்தை எதிர்த்து உண்மையை நிலைநிறுத்தும்பொருட்டு, தன்னுடைய உயிரைத் தியாகஞ் செய்ய பின்வாங்கமாட்டார்கள்,

இன்றைக்கு 1285-வருடங்களுக்குமுன், ஆஷூராவென்ற (முஹர்ரம் மாதம் 10-ம் தேதி)மணல் சொரிந்த"கர்பலா"வின் மைதானத்தில் புரானத்தென்ற நதிக்கரையில் ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களும், பொல்லாதவர்களின் சூழ்ச்சிக்குட்பட்டு அடைந்த கஷ்ட நிஷ்டூரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் மறக்கவியலாது.

நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பரிசுத்த குடும்பத்தைச்சார்ந்த இந்நல்லோர், ஜலம் நிறைந்த புராத் நதிக்கரையில் அடக்கமுடியாத தாகவிடாய்கொண்டு முடிவுவரை ஒரு துளி ஜலத்தையேனும் அருந்த இயலாத நிலையில் உயிரைத் தியாகஞ் செய்தவரலாற்றையறிந்து துக்கசாகரத்தில் மூழ்காத முஸ்லிம்களுமுண்டா?

ஓ முஸ்லிம் சகோதரர்களே! நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஈரல்துண்டாகிய ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "கர்பலா" வென்னும் மைதானத்தில் வெட்டுண்ட சம்பவத்துள் அடங்கியிருக்கும் இரகசியங்களை உற்று நோக்கமாட்டீர்களா?

ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களின் பாட்டனாராகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்

அவர்களின் உம்மத்தோர்க்கு முன்மாதிரியாக விருக்கும்பொருட்டே, அழிந்து போகாத இந்த நிகறற்றதியாகத்தைப் புரிந்தார்கள் போலும்.

ஏகதெய்வக் கொள்கையின் சந்ததிகளே! ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 72-பெயர்களைமட்டும் வைத்துக்கொண்டு பெரும்பலமுள்ள சைனியங்களை ஏன் எதிர்த்து நின்றார்களென்பதையொட்டியும், சொல்லொணக் கஷ்ட நிஷ்டூரங்களிலும், பெரும் சோதனைக்குரிய தொந்தரையிலும் சிக்குண்டு, தங்கள் பாட்டனாராகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பின்பற்றியவர்களால் துன்புறுத்தப் பட்டதேனென்பதையும் நீங்கள் உற்றுநோக்கிய துண்டா?

பரிசுத்தபூமியின் வழிப்போக்கரும், அமைதியின்பட்டினத்து கிரீடாதிபதியும், நபித்துவத்தின் குடும்பத்தைச்சார்ந்த ஞாபகச் சின்னமும், சுவநுலகப் பெண்மணிகளின் தலைவர் பாதிமாரலியல்லாஹு அன்ஹாஅவர்களின் கண்ணொளியும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பரிசுத்த குடும்பத்தைச்சார்ந்த பிரகாசமுமான, ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், புராக்கை வாகனமாகக்கொண்ட நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் புஜத்தில் ஏறியிருந்தவர்களும், கௌரவம்வாய்ந்த ஸஹபாக்களின் நட்புக்குரியவர்களும் உண்மை,சத்தியம், ஆகியவைகளை நேசிப்பவர்களும், குபுர்,அநியாயம்,நாஸ்தீகக்கொள்கை முதலிய கெடுதிகளை அகற்றுகிறவர்களும், வாள்வீச்சின் நிழலிலுங்கூட அல்லாஹுத ஆலாவை வணங்குவதற்காக தங்களின் சிரசைப் பணிபவர்களுமான ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களின் புத்திரர்களைப் பலிகொடுத்து, நண்பர்களை அல்லாஹுத ஆலாவின் வழிபாட்டில் தியாகஞ்செய்து, தங்களின் குடும்பத்தாரை இஸ்லாமுக்காக அற்பணமாக்கி, நிகறற்ற மேன்மைக்குரிய தங்களின் பெண்மணிகளை அல்லாஹுத ஆலாவின் மீதுள்ள நம்பிக்கையை முன்னிட்டு எதிரிகளின் மத்தியில் விட்டு, உயிரைத் திரணமாக மதித்து ஹஜ்ரத் அவர்கள் உலகோர்க்குக்காட்டிய "ஸிராத்தே முஸ்தகீம்" என்னும் நல்வழியாது?

பண்டம், பொருள், ஐசுவரியம் ஆகியவைகளைக் கொண்டாடும் அறிவிலிகளே! மனைவிமக்களை அழியாப்பாக்கியமெனக்கருதும் ஞானமற்றவர்களே! காணி, பூமி, மாளிகை முதலியவற்றை நேசிக்கும் பேதைகளே! "கர்பலா" வென்னும் பாலைவனத்துள் மறைந்து கிடக்கும் அழியாவாழ்வு, குறைவில்லாநட்பு, நற்சக்தி ஆகியவைகளைத்

தேடி எடுக்கமாட்டீர்களா? உங்களின் இம்மை, மறுமை ஆகிய இரு வாழ்க்கைக்கும் வேண்டுவனவெல்லாம் அப்பாலைவனத்தில் மறைந்து கிடக்கின்றன,

மறக்கவியலாத இப்பெரும் ஞாபகார்த்தத்திற்குரிய நிகழ்ச்சியினூடேயே நம் வாழ்க்கையைச்சார்ந்த ஒவ்வொருவருடமும் ஆரம்பமாகிறது. ஆனால்,ஹஜ்ரத் இமாம்ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் முன்மாதிரியான நற்காரியத்தைப் பின்பற்றக் கடமைப்பட்டிருப்போர் இன்று புரியும் விபரீதக் கூற்றுக்களவே கிடையாது. சுருங்கச் சொல்லின் இஸ்லாம் மார்க்கத்தை நேசித்து எல்லாவற்றையும் தியாகஞ்செய்த ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பெயரைச் சொல்லிக்கொண்டு இஸ்லாம் மார்க்கம் விலக்கியுள்ளவைகளையெல்லாம் வெகு ஆடம்பரத்தோடு புரிவோர்க்குக் குறைவில்லை.

ஆனால் அல்லாஹு தஆலாவின் சம்மதத்தைப்பெற்ற காரியங்களிலேயே சதா ஈடுபட்டிருக்கவேண்டும்.அல்லாஹு தஆலாவின் வழிபாட்டில் அவசிய மேற்படின் ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப்போல் மனைவிமக்கள், சுற்றத்தார், உயிர், பொருள், முதலிய எல்லாவற்றையும் தியாகஞ்செய்து விடவேண்டுமென்பதையே "முஹர்ரம்" மாதம் 10-ம் தேதியாகிய ஆஷூராவென்னும் தினம் நமக்குக் கற்பிக்கின்றது.

திருப்பத்தூர் படேசா.

முஸ்லிம்களுக்கோர் எச்சரிக்கை.

மதுரை கொல்லன் தெருவில் மாயவரம் சையது ஹஸன் சாஹிப் சில நாட்களாய் ஹதீது சொல்லிவந்தார்கள். ஹதீது சொல்லுமிடையிடையே, திருப்பத்தூர் ஒலியுல்லாவென்று அவ்விடம் பேர் வழங்கி வரும், கீழக்கரை காஸியார் மகன் அப்துல் காதிர் சாஹிப்பேரில், அபிராமம் மௌல்வி அப்துல் காதிர் சாஹிப் இயற்றியுள்ள, இரண்டு அரபீ கிதாபுகளிலுள்ள கவிகளை தாம் ஓதியும், ஓதும்படி ஜனங்களைத் தூண்டியும் வந்தார். இவ்விருநூல்களும் முஸ்லிம்களின் அகீதாக்களை (கொள்கைகளை) கெடுக்கக் கூடியனவாய் இருப்பதாலும், இவ்வூர் வாசிகளில் அநேகர்களுக்கு பிடித்த மில்லாமலிருப்பதாலும், உலமாக்களிடம் இவைகளைப்பற்றி கேட்டதில் அவர்கள் எல்லோரும் ஏகமனதாய் மேற்கூறிய கித்தாபுகளை பார்வையிட்டு அவைகளில் அநேக தவறுகள் இருப்பதாய் சொன்னார்கள். இது நிமித்தம் மேற்

சொன்ன கித்தாபுகளின் கவிகளை ஓதாமல் ஹதீது சொல்லும்படி ஆலிம் சாஹிபுக்கு சொல்லப்பட்டும், மேற்படி மாயவரம் ஆலிம் சாஹிப் மேற்படி கவிகளை ஓதாமல் ஹதீது சொல்ல முடியாதென்று மறுத்துவிட்டார். என்னே இவருடைய அறியாமை!

மேற்குறிப்பிட்ட இருநூல்களுக்கும் ஆசிரியரான அப்துல் காதர் மௌல்வி சாஹிப் அவர்கள் இங்கு தாசில்தார். பள்ளியில் மேற்படி மாயவரம் ஆலிம் சாஹிபுடன் வந்து தங்கியிருந்தார்கள்.

இம்மதுரை மௌல்விகள் மேற்படி கித்தாபுகளில் அநேகம் தவறுகளுண்டெனக் கூறியதை செவியுற்ற, அபிராமம் ஆலிம் சாஹிப் அவர்கள் தங்களிடம் நேரில்வந்து சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்ளலாமெனக் கூறியதை முன்னிட்டு, கொல்லம் பட்டரை முஸ்லிம்கள் முத்துச்சாவடியிலிருந்து இரத்தின வியாபாரம் செய்துவரும் காயற்பட்டணம் ஜனுப் மு. அ. ஹபீப் முஹம்மது ஆலிம் சாஹிபவர்களைத் தலைமையாகக் கொண்டு அப்துல் காதிர் மௌலவி சாஹிபிடம் சென்றார்கள்.

ஹபீபு முஹம்மது ஆலிம் சாஹிப் அவர்களுக்கும், அபிராமம் ஆலிம் சாஹிப் அவர்களுக்கும் சுமார் 50-பேர்களடங்கிய மஜ்லிஸில் தாசில்தார் பள்ளியில் 1926-ம் வருடம் ஜூலை மாதம் 17-ந்தேதி மாலை 10-30-மணிக்கு நீண்ட விவாதம் நடந்தது.

முடிவில் ஹபீபு முகம்மது ஆலிம் சாஹிபவர்கள் அப்துல்காதிர் ஆலிம் சாஹிபவர்களை நோக்கி தாங்கள் இயற்றியுள்ள கித்தாபில் திருப்பத்தூர் ஒலியுல்லாவை "நீர் அல்லாஹுவில் நின்றும் அச்சமற்றவர்" என்றுசொல்லி இருப்பதானது குபுரை வருத்தக்கூடியதாக இருக்கிறதே, என்றுவினவ, சற்று மௌனமாயிருந்துபின் தங்களின் மேற்படி கித்தாபை எடுத்து எவ்விடத்தில் சொல்லியிருக்கிறேன் காண்பியுங்கள் எனக் கேட்டார்கள். 101-வது பக்கத்திலிருப்பதாய்க் காண்பிக்கப்பட்டது.

அதன்பின் அபிராமம் மௌலவிசாஹிபு அவர்கள் ஒப்புக்கொண்டார். பிறகு கூடயிருந்த ஜனங்கள் அவர்கூறியுள்ள வாக்கியம் குபுரை வருத்தக்கூடிய சொல்லென்று தெரிந்துகொண்டு கூட்டம் கலைந்துவிட்டது.

ஆகையால் முஸ்லிம் சகோதரர்கள் இவ்வித தவறான வாக்கியங்களை நம்பிவழி கெட்டுப்போகாமல் எச்சரிக்கையாயிருந்துகொள்ளுங்கள் என்று 6-முஸ்லிம் கனவான்கள் கையெழுத்திட்டு நமக்கு எழுதியிருக்கிறார்கள்.

(ஸை. இ).

முஸ்லிம்கள் மஸ்ஜிதில் கூடுவது குற்றமா?

டில்லியில் முஸ்லிம் ஹால் கட்டும்பொருட்டு, 1913-வருஷ நியமிக்கப்பட்ட கமிட்டியின் விளம்பரத்தைக் கண்டித்து ஓர் அல்லாமா எழுதியிருப்பதாவது :—

'மஸ்ஜிது'களில் கூட்டங்களை நடத்தி வைப்பதை யொட்டி ஏற்பட்ட விவாதத்தின் பயனாக டில்லியில் முஸ்லிம் ஹால் கட்டுவதற்காக ஒரு கமிட்டி நியமனஞ் செய்யப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. முஸ்லிம் ஹால் கட்டவேண்டுமென்னும் நோக்கம் அதி உத்தமமானதே. மேலும் டில்லியைப்போல் ஒவ்வொரு இடத்திலும் முஸ்லிம் ஹால் கட்டப்பட வேண்டுமென்றுங் கூறுவோம். ஆனால் நன்மைக்குரிய காரியங்களோடு பிசகையும் சேர்த்துக்கொள்வது அவசியமா?

“மஸ்ஜிதுகளில் ராஜீயக் கூட்டங்களையும், கல்வி சம்பந்தமான கூட்டங்களையும், நடத்தி வைக்க முடியாதென்றும், வணக்கத்தைத் தவிர மற்ற எக்காரியத்தையும் மஸ்ஜிதுகளில் புரிவது ஷரயின்படி ஆகாதென்றும் ஆதலின் முஸ்லிம் ஹாலைக் கட்டவேண்டியதாகவிருக்கிறதென்றும்” முஸ்லிம் ஹால் கமிட்டியாரால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் வரையப்பட்டிருக்கின்றது.

முஸ்லிம் ஹால் கட்டவேண்டுமென்னும் யோசனை உத்தமமானதாக விருப்பினும் அதன் அவசியத்தை யொட்டி மேற்கூறப்பட்டுள்ள அறிக்கையில் வரையப்பட்டிருக்கும் காரணத்தை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளுமா? இப்பிசகைப் புரியாமலேயே முஸ்லிம் ஹாலைக்கட்டி விடக்கூடுமல்லவா?

டில்லியில் முஸ்லிம் ஹாலைக் கட்டுவதால் ஏற்படும் நன்மையைக் காட்டினும் அதைக் கட்டுவதை யொட்டி வெளியிடப்படும் தப்பபிப்பிராயங்களின் மூலமாய் முஸ்லிம்கள் பெரும் நஷ்டத்திற்குட்படவேண்டியதாக விருக்கும். முஸ்லிம் ஹால் கட்டப்படாவிட்டால் பாதகமில்லை: ஆனால் அதற்காக இஸ்லாமிய அறிவு, மதக்கட்டளை ஆகியவைகளில் தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ணுவது நியாயமா?

மார்க்கத்தையும், மார்க்க சம்பந்தமான உத்திரவுகளையும், அறியாதோர் மத விஷயத்தில் தலையிட்டு “பத்வா” கொடுக்கும்படி இவர்களுக்கேற்பட்டிருக்கும் பெரும் நிர்ப்பந்தமென்ன வென்பதை யறிய சதா என்னால் சாத்தியப்படாமலேயே இருக்கின்றது.

மஸ்ஜிதுகள் அல்லாஹுத ஆலாவின் வணக்கத்திற்குமட்டும் உரிய விடமென்று அவர்கள் கூறுவதை மறுக்க முடியாது. ஆனால் இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு நன்னோக்கம், உண்மை, ஆகியவைகளை முன்னிட்டு மஸ்ஜிதுகளில் முஸ்லிம்களின் கூட்டம் நடைபெறக்கூடாதென்றும் கூற இஸ்லாம் சம்மதிக்குமா?

மஸ்ஜிதுகள் அல்லாஹுத ஆலாவின் வணக்கத்திற்குரிய இடமென்று கூறி உண்மையில் முஸ்லிம்களின் மதஉரிமை, ராஜீய நன்மை, கல்வி, நல்லொழுக்கம், ஆகியவைகளை யொட்டிய கூட்டங்களையும் மஸ்ஜிதுகளில் நடத்திவைக்கலாமென்று ஒப்புகொண்டு விட்டார்கள். ஏனெனின்? தேகசம்பந்தமான "ருகூஉ" "ஸுஜித்" ஆகியவைகளைமட்டும் இஸ்லாம் வணக்கமென்று கூறவில்லை. ஆனால், உண்மை, நேர்வழி, நியாயம், ஆகியவைகளைச் சார்ந்த ஒவ்வொரு காரியத்தையும் வணக்கமென்றே இஸ்லாம் அறிவுறுத்துகிறது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஜீவியகாலத்தில் "மஸ்ஜிதெநபவீ" யானது முஸ்லிம்களின் கூட்டங்கள் நடைபெறக் கூடிய ஒரு பொது ஸ்தலமாகவே யிருந்தது. அதில் முஸ்லிம்களின் நன்மையைக் கோரிய சகல காரியங்களும் நடைபெற்று வந்தன.

இதை மெய்ப்பிப்பதற்கு இஸ்லாமிய கிரந்தங்களிலிருந்து ஏராளமான சாக்ஷியங்களை எடுத்துக் காட்டக்கூடும். நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ராஜீய சம்பந்தமான எல்லாக் கூட்டங்களையும் மஸ்ஜிதிலேயே நடத்திவைத்திருக்கின்றார்கள். யுத்தத்திற்குத் தயாராகும்படி முஸ்லிம்களுக்கறிவிக்க வேண்டிய பிரசங்கங்களையும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மஸ்ஜிதிலேயே புரிந்திருக்கின்றார்கள். மஸ்ஜிதே நியாய ஸ்தலமாக விருந்து அதில் வழக்குகள் தீர்க்கப்பட்டன. "ஸியர்" "ஹதீது" ஆகிய கிரந்தங்கள் உலகத்திலிருந்து எடுபட்டுப்போகாமலிருப்பதோடு அதைச் சார்ந்த அறிவு முஸ்லிம்களிடை இன்னமும் இருந்து வருகின்ற நிலைமையில் தவறான விவாதத்தைச் செய்ய ஜனங்கள் இத்தகைய தைரியத்தைக் கொண்டிருப்பது ஆச்சரியமே.

"பத்ர்" யுத்தத்தில் பிடிபட்ட கைதிகளை தொகை வாங்கிக் கொண்டு விடுதலை செய்தது, உஹத் சண்டைக்காக, மதினாவிலிருந்து புறப்பட்டது, அகிழ் யுத்தத்தின் போது முற்றிகை யிட்டது, மதீனாவின் விளைபொருளில் மூன்றில் ஒரு பாகத்திற்கு சமாதானஞ் செய்து கொள்வதை யொட்டிய முடிவு, ஹுதைபியா விஷயம் முதலிய எண்ணிறந்த ராஜீய விஷயங்கள் மஸ்ஜிதெநபவியிலேயே முடிவு

பெற்றிருக்கின்றன. இதன் உண்மையை யறிய விரும்புவோர் "ஸாத் துல்ம ஆத்", "திப்ரீ" ஆகிய கிரந்தங்களை மட்டுமாவது எடுத்து வாசிப்பார்களாக.

குலபாயெ ராஷிதீன்களின் காலமானது இஸ்லாமிய செய்கையின் பூரண வடிவத்தைச் சார்ந்த காலமாகும். அக்காலத்தில் மஸ்ஜிதெநபவியானது மதீனாவின் ஒரு முஸ்லிம் ஹாலாகவே யிருந்தது. ஏதேனும் முக்கியமான சம்பவம் ஏற்படின் "முஅத்தின்" வெளிக்கிளம்பி "அஸ்ஸலாத்து ஜாமி அத்துன்" என்று கூவிக்கொண்டே செல்லுவார்கள். இச்சப்தத்தைக் கேட்டு ஜனங்கள் மஸ்ஜிதெநபவியில் வந்து கூடுவார்கள். பின்னர் அக்காலத்து கலிபா அவர்கள் ஜனங்களுக்கு விஷயத்தை எடுத்துரைப்பார்கள்.

பிரதேசங்களின்மீது படை எடுப்பதை யொட்டிய யோசனைகள் மஸ்ஜிதெநபவியிலேயே செய்யப்பட்டன. யுத்தத்தில் ஜெயமேற்பட்ட சந்தோஷச் செய்திகள் மஸ்ஜிதெநபவியிலேயே ஜனங்களுக்கறிவிக்கப்பட்டு வந்தன. "திம்மி"களின் உரிமையைப் பற்றி மஸ்ஜிதெநபவியிலேயே விவாதம் நடைபெற்றது. "ஜஸியா" வாங்குவதை யொட்டி விஷயமும் மஸ்ஜிதெநபவியிலேயே முடிவுபெற்றது. மத சம்பந்தமான பற்பல விவாதங்களும் மஸ்ஜிதெநபவியில் நடைபெற்றன. ஹதீதுஷரீபின் உண்மையைச் சார்ந்த ஆராய்ச்சியும் மஸ்ஜிதெநபவியிலேயே நடைபெற்றது. மஸ்ஜிதெநபவியிலேயே சமஸ்தானாதிபதிகளைக் கேள்வி கேட்கப்பட்டிருக்கின்றது. மஸ்ஜிதெநபவியிலேயே முஸ்லிம்களின் உரிமையை யொட்டிய தீர்ப்புகளும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கங்களின் மீதுள்ள வெறுப்பு அல்லது விருப்பைச் சார்ந்த செய்திகளை மஸ்ஜிதெநபவியிலேயே வெளியிடப்பட்டுவந்தன. கட்டளைகளை பிறப்பிப்பது, உத்தியோகஸ்தர்களை நியமனஞ் செய்வது, அவர்களின் ரிபோர்டுகளை வாசிப்பது முதலியவைகளும் மஸ்ஜிதெநபவியில் நடைபெற்றன.

(தொடரும்)